1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

“ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் ”

76-ம் புத்தகம் 33-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆவணி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## என் வாழ்வின் ஒளி கிறீஸ்துநாதர்

....அன்றொருநாள் ஓர்சூரிய கிரணம் நிகழ்ந்தது. எல்லோரும் சூரியவிமர்சனத்தில் இறங்கிவிட்டனர். ஏதோ புதிதாக அன்றுதான் கதிரவனைக் காண்பவர்கள்போல, எல்லோரும் சூரியன்மங்கி மறையும்வேளையை எதிர்நோக்கியிருந்தனர். ஆனால், அனுதினமும் வீசும் இச்சுடரொளிபற்றிச் சிந்திப்பவர் எத்தனைபேர்? கடவுள் நமக்குக்கொடுத்துள்ள சிறந்த கொடைகளில் கதிரவனும் ஒன்று என்பதை நினைத்திருக்கிறோமா? இருண்டுகிடக்கும் உலகை—உயிரெலாம்ஒடுங்கி உறங்கும் நிலையிலுள்ளஉலகைச் சூரியோதயம் எவ்வளவு அழகுபடுத்துகிறது! ஒளியற்று மங்கிக்கிடந்த பொருட்கள் இரம்மியமான உருவெடுக்கின்றன. வண்ணமலர்களும், பலநிறப்பறவைகளும், வானின்நீலமும், வயல்களின் பசுமையும். ஆழ்கடல் கருமையும்...அழகெனக் கொள்ளப்படும் அனைத்துமே அருணனின் அதிசயஒளியால் தம்அழகைப் பெறுகின்றன. இவ்வளவு பயனளிக்கும் சூரியனைப்பற்றி நாம் எப்போது நினைக்கிறோம். அந்த ஒளி மங்கிமறையும்போதுதான்! உள்ளபொருளை மறப்பதும், இல்லாதபொருளை விரும்பிவாடுவதுந்தான் நம்இயல்புஎன்றால் நீங்களும்நானும் விசித்திரப் பொருட்கள்தானே!

இருளில் மருண்டுநிற்கும் போதுதான் ஒளியைத் தேடுகிறோம். ஒளிகளில்தான் எத்தனைவிதம்! கதிரவனின் வெண்ணொளி, சந்திரனின் தண்ணொளி, மின்சாரத்தின் சோதி ஒளி, தீபஸ்தம்பத்தின் கற்றை ஒளி, குத்துவிளக்கின் மங்கிய ஒளிமுதலிய எத்தனையோ ஒளிகள் நமக்குஉதவுகின்றன.

இவற்றையெல்லாம்விட நமக்குஅதிக பயனையளிக்கும் ஒளி ஒன்று உளது. இருவுலகிலும் இன்பம்பயக்கும்ஒளி. அதுதான் நம்அகத்தின் அழகிய அகல் விளக்காய் அமைந்துள்ள ஆண்டவரின் அருளொளி. இயற்கை ஒளிகொண்டு ஊனக்கண் உலகைஉணருகிறது. அருளொளிகொண்டு அகக்கண் ஆண்டவனை அறிகிறது. வெளிச்சத்தில் நடப்பவன் தடுமாற்றம்அடைவதில்லை. அருளொளியில் நடப்பவனும் அச்சம் தவிர்த்து, “ஆண்டவரே என்ஒளி; நான் யாருக்கு அஞ்சுவேன்?” (சங். 26 : 1) என மொழிவான்.

உலகமெங்கும் அஞ்ஞான இருள் கவிந்திருப்பது கண்கூடு. ஞானவரட்சியும், ஆத்மீகஇருளும் பரவியிருப்பதால் மனிதகுலம் தடுமாறுகிறது. எத்தனை கட்சிகள், புரட்சிகள், சமூக அமைப்புகள், சட்டங்கள், மதக்கோட்பாடுகள் தோன்றினாலும் மனிதனின்தடுமாற்றம் நின்றபாடில்லை. ஆனால், ஒருஸ்தாபனத்தில் உள்ள மக்கள்மட்டும் யாதொருமயக்கமுமின்றி, “நாங்கள் ஒளியின்மக்கள்” (மத். 5 : 14)எனப் பறைசாற்றுகின்றனர். காரிருள்மத்தியில் கலங்கரைவிளக்குப்போல், இருண்டுநிற்கும் ஆத்மீகஉலகில் சத்தியதிருச்சபை ஞானஒளிவீசுகிறது. கதிரவனின்ஒளியைச் சந்திரன் பிரதிபலிப்பதுபோல, நித்திய சூரியனாம் கிறீஸ்துவின் தெய்வத்துவ ஞானஒளியைச் சத்தியதிருச்சபை வீசுகிறது.

— தேனீ —

“உலகின் ஒளிநானே! என்னைப்பின்பற்றுகிறவன் இருளில் நடப்பதில்லை; ஆனால், சீவியத்தின்ஒளியைப் பெறுவான்” (அரு. 8 : 12.) “இன்னும் கொஞ்சக்காலம் உங்களுக்கு வெளிச்சம்உண்டு. ஆதலின் இருள் உங்களை மூடாதபடி, உங்களுக்கு வெளிச்சம் உள்ளபோதே நடந்துகொள்ளுங்கள். ஏனெனில், இருளில்நடக்கிறவன் தான்போகிறது எங்கேயென்று அறியான். நீங்கள் ஒளியின்மைந்தராகும்பொருட்டு உங்களுக்கு ஒளியுள்ளபோதே, ஒளியின்மீது விசுவாசமாயிருங்கள்” (அரு. 12 : 35, 36) என மொழிந்தவர் கிறீஸ்துநாதரே.

கிறீஸ்துவின் ஒளியை நீங்கள் பூரணமாய்ப் பெறுகிறீர்களா? அல்லது அறியாமை மேகங்களும், அஞ்ஞான மூடுபனியும் அவ்வொளியை மறைக்கின்றனவா? கிறீஸ்துநாதர் ஈராயிரம் வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர்தான். ஆனால், அவர்இன்றும் நீங்காத சுடர்விளக்காய், மங்காதசோதியாய்ப் பிரகாசிக்கிறார். பரிசுத்த சுவிசேஷங்களைப் புரட்டிப் பாருங்கள்!

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## அன்னக்குட்டியின் அக்கினிப் பரீக்ஷை!

என்ன! அக்கினிப்பரீட்சையா? அப்படியும் ஒரு பரீட்சை உண்டா? இதென்னவிந்தை! எதற்காக இப்பரீட்சை? பரீட்சிக்கிறவர் யார்? பரீட்சிக்கப்படுபவர் யார்?

19-8-1910-ம ஆண்டு பிறந்த அன்னக்குட்டி சிலநாட்களில் தாயை இழந்ததால, அவள் பெரியதாயார் தனது நான்கு ஆண்பிள்ளைகளோடு ஒருபெண்ணாகிய அன்னக்குட்டியையும் ஏற்றுச் சிறப்பாகவளர்த்துவந்தாள். பருவம்எய்திய அவளை நல்லஇடத்தில் கொடுத்துத் தன்னைப்போன்று அவளும் பிள்ளைகுட்டிகளுடன் வாழ்வதைக் காணவேண்டும்என்று எண்ணினாள். ஆனால், அன்னாள் தன்னை முழுவதும் யேசுநாயகருக்கு ஒப்புக்கொடுத்திருந்தாள். பெரியம்மா அன்னாளைச் செல்வமாக வளர்த்தாளெனினும் மிகவும் கண்டிப்புடன் வளர்த்தமையால், தன் எண்ணத்தைத் தெரிவித்தால் கோபிப்பாளே என நினைந்து சும்மாஇருந்துவிட்டாள்.

கலியாணப்பேச்சும் ஆரம்பமாயிற்று. இனியும் தாமதித்தல் கூடாதென்றெண்ணித் தன் பெரியப்பாவிடம்போய்: “நமது ஆண்டவருடைய ஐந்துதிருக்காயங்களைக்குறித்து நான் உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்; என்னைமட்டும் கலியாணம்செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப் படுத்தாதீர்கள்” என்று மன்றாடிக்கொண்டிருக்கும்போதே உணர்ச்சிவேகத்தால் மயக்கம்வந்து விழுந்துவிட்டாள். அவரும் இரக்கமுற்று “உன்விருப்பப்படியே செய்” என்று அவளைத்தேற்றினார். ஆனால், பெரியதாயாரோ, நீ மடத்திற்குப் போவதற்கு நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்என்று சபதம்போட்டுக்கொண்டு, ஒரு வாலிபனுக்கு அவளை மணமுடித்து வைப்பதாகவும் உறுதிகூறிவிட்டாள். காரியம் மிகவும் மோசமான நிலைக்கு வந்துவிட்டது.

அன்னாள் தன் அன்பரையும், தேவஅன்னையையும் பார்த்து வேண்டினாள். அழுதாள். முற்காலத்தில் பரிசுத்த கன்னியர்கள் என்னசெய்தார்களென யோசித்தாள். பரிசம்போடுகிற அன்று கோவிலுக்குப்போக முடியாதபடி தன்உடலை ஊனப்படுத்திக் கொள்வதென முடிவுகட்டிக்கொண்டாள்.

உடலை ஊனப்படுத்திக்கொள்வதா? ஏன்? ஆ! இக்காலத்தில் கடவுள்கொடுத்த இயற்கை அழகுபோதாமல் செயற்கை அழகுசெய்யப் பவுடர், கிறீம் வகைகள், உதட்டுச்சாயம், மின்சாரத்தினால் கூந்தல்சுருள், பின்னுதல், வகைவகையான அணிவகைகள் இவற்றையெல்லாம் பிரயோகித்து “நவநாகரீகம்!” “பெண்கள் சுதந்தரம்!” என டம்பம்பேசும் நமது நாரிமணிகள் மட்டுமல்ல, ஆடவர்களும் யோசிக்கவேண்டும், ஏன் தனது இயற்கை அழகையும் அன்னாள் வெறுத்தாள் என்று. இதுவே அக்கினிப்பரீட்சையின் தொடக்கம். தனது பரீட்சையைப்பற்றி அன்னாள் சொல்வதைக் கேளுங்கள்.

— ச. ச. ஜான் —

“நான் யேசுவுக்கே என்னை அர்ப்பணித்திருந்தேன். கலியாணஞ் செய்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கவேண்டும் என்பது பெரியம்மாவின் தீர்மானம். அவசரத்தில் நகைகளெல்லாம் செய்தாகிவிட்டது. பெண்ணின் அழகைத்தானே ஆடவர் விரும்புகிறார்கள். அதை நான் ஊனமாக்கிக்கொண்டால் என்ன? இத்தீர்மானத்தோடு இரவு முழுவதும் செபித்தேன்.

அறுவடையில் கொண்டுவந்த சாவிசண்டுகளையெல்லாம் எங்கள்வீட்டுக்கருகிலிருந்த குழியில் போட்டுநிரப்பித் தீமூட்டியிருந்தார்கள். நான்காலையில்எழுந்ததும் நேரே அந்தக்குழிக்குப் போய் ஒருகாலைத் தீயில்வைத்தேன். மறுகாலும் வழுக்கிவிட்டது. குழியில்விழுந்தேன். குழியோ என் உயரத்துக்குமேல் ஆழம். இப்படியும் அப்படிமாக ஏறமுயன்றேன். ஆடையிலும் தீபிடித்து, அவிழ்ந்திருந்த என் கூந்தலிலும் தீபற்றியது. நான் எப்படி மேலேவந்தேனோ தெரியாது. எப்படியும் தப்பித்துக்கொண்டேன். உடனே வீட்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரும் இந்தியாவும்

இந்தியாவின் சிலபகுதிகளிலே இன்றியமையாத உணவுப் பொருட்கள் வெகுவாகக்குறைந்து ஏற்பட்டிருக்கும் கவலைக்கிடமான நிலைமைகள்பற்றித் தமக்கு எட்டியுள்ள அறிக்கைகளாலே பாப்பரசர் கிலேசமுற்றவராய்ச் சென்னை, பீகார் மாகாணங்களிலே மிகவும்மோசமாகப் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் கஷ்டநிவாரணத்துக்கென்று சென்னை அதிமேற்றிராணியாருக்கும், ரஞ்சிமேற்றிராணியாருக்கும தனித்தனி ஐயாயிரம் டலர் அனுப்பியிருந்தார். ஆனல், இந்த உதவியானது பஞ்சத்தால் அதிகம்பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களின் தேவைகளுக்குப் போதியதல்ல என்பதை அறியவந்து மேலும் பதினயிரம் டலர் அனுப்பிவைத்துக் கத்தோலிக்கஸ்தாபனங்களாலே ஆதரிக்கப்படும் கஷ்டநிவாரணவேலைகளில் மனப்பூர்வமாகவும்; கிறிஸ்தபிறர்சிநேகத்துடனும் உழைக்கும்படிகேட்டு இந்தியா முழுவதிலுமுள்ள தமது ஞான மக்களுக்கெல்லாம் பிதாவுக்குரிய தமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் வழங்கியிருக்கின்ருர்.

### நூற்றுக்கு இருவரே

ஜேர்மனியிலே நாஸியஆட்சி நடைபெற்றகாலத்திலே ஜேர்மன்கத்தோலிக்கரில் நூற்றுக்கு இருவர்வீதமானேரே திருச்சபையிலிருந்து விலகிஞர்கள். தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவகையில் நெருக்கப்பட்டே அவ்வாறு விலகியவர்களில் அநேகர் யுத்தம்முடிந்ததும் ஏறக்குறைய உடனே தானே மறுபடியும் திருச்சபையில் சேர்ந்துவிட்டார்கள். 1944-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டு வரையிலுள்ள காலத்துக்கென அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கும் ஜேர்மன் "கதலிக் டிறெக்றறி"யிலே இந்தவிபரம் தரப்பட்டிருக்கிறது. ஜேர்மன் குடிசனங்களில் மூன்றிலொரு பங்குக்குச் சற்றேகூடியதொகையினர் கத்தோலிக்கராவர்.

### முத். பத்தாம் பத்திநாதர்

பத்தாம்பத்திநாத பாப்பானவர் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பெற்று இரண்டுமாதகாலஞ் செல்லாமுன்னரே அவர் சலிகையால் மூன்று அற்புத ஆரோக்கியங்கள் கிடைக்கப்பெற்றிருக்கும்காரணமாக அவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டுவதும் சாத்தியமாகுமா என்பதுபற்றி ரோமாபுரியிலே ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டுவதற்கு நிரூபிக்கப்பட்ட இரு அற்புதங்கள் வேண்டற்பாலன. வழமையிலே இந்தவிசாரணை நடைபெற அதிககாலஞ் செல்ல வேண்டும். சொல்லப்படும் மூன்று புதுமைகளிலும் முதலாவதானது, சமீபத்திலே மிலான் நகரில் நடைபெறலாயிற்று. அதுபற்றிய திட்டமானவிபரங்கள் இன்னமும் கிடைக்கவில்லை. இரண்டாம், மூன்ரும் புதுமைகள் ரோமாபுரியிலேயே நிகழ்ந்தன. இவற்றுள் ஒன்றிலே சம்பந்தப்பட்டவர் இத்தாலிய நிதிமந்திரி காரியாலயத்தில் முன்னர் ஓர் நிர்வாகதலைவராய்இருந்துவந்த ஒருவராவர். அநேகவருடகாலமாக இவர் கொடியதும், அபாயகரமுமான நோய்ஒன்றினல் உபாதைப்பட்டுக் கொண்டிருந்தார். இவரை ஓர்தீராப்பிணியாளியென்று டக்றர்மார் கூறிவிட்டனர். முத். பத்தாம் பத்திநாதரின் சலிகையால் இவர் திடீரெனக் குணமடைந்தார். மற்றதில் சம்பந்தப்பட்டவர் பத்து வயசுடைய ஓர் ரோமைப்பாலியர். குடற்தாபிதத்துக்கும் தொந்திப்பை வீக்கத்துக்குமாக இப்பாலியர் சத்திரவைத்தியஞ் செய்யப்பெற்றும் குணமடையாமல் வருந்திக்கொண்டிருந்தார்.

### சின்னமலரின் "சின்னத்தாய்"

லிஸியேபதி அர்ச். சின்னத் தெரேசம்மாளின் மூத்தசகோதரியும், அவள் நாலரைவயதுப் பாலகியாய் இருந்தது முதல் அவளுடைய சின்னத்தாயும், அவள் சீவியத்தின் கடைசியான நான்குவருடங்களிலும் கார்மேல்மடத்திலே அவளுடைய சிரேஷ்டதாயாருமான யேசுவின் அக்னேஸ்தாயார் தான் 58 வருடகாலம் தலைவியாகவிருந்த லிஸியேயின் கார்மேல் மடத்திலே தனது 90-ம்வயதில் காலஞ் சென்றுவிட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இவள் 69 வருடம் கன்னிகா வாழ்க்கை நடத்தியிருக்கின்ருள். அர்ச். தெரேசம்மாளின் சகோதரிகளில் இன்னமும் உயிரோடிருக்கும் ஒரேயொரு சகோதரி, சிஸ்றர்ஜெனெவியெவ்(செலின்) மாத்திரமே. இவளும் லிஸியே மடத்தில்தான் இருந்துவருகின்ருள். சங். அக்னேஸ்தாயார் 1877-ம்ஆண்டு ஆவணி 23-ந் திகதி தெரேசம்மாளின் "தாய்" ஆயினள். அன்று தங்கள் தாயின் பிரேதஅடக்கத்திலிருந்து அநாதைகளாக ஐந்துசகோதரிகளும் கவலையுடன் வீட்டுக்குத் திரும்பினர்கள். அப்போது வீட்டுப்பணிப்பெண் அவர்களைப் பார்த்து, "கதியற்ற சிறுபிள்ளைகளே! உங்களுக்குத் தாய் இல்லை" யென்று சொன்னள். அப்போதே சின்னத்தெரேசம்மாள் "பவுலின்அக்காவே எனது தாயாய் இருப்பாள்" என்று சொல்லிக்கொண்டு அவள் கரங்களில் ஓடிப்போய் விழுந்தாள். ஆனல், அவள் ஒருவருடமாகப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது அவளது "சின்னத்தாய்" கார்மேல்மடத்திற் சேரவே அவள் மனமுடைந்தாள். அவள் முதல்நன்மைபெற்ற அன்றுதினமே பவுலின் சிஸ்றர் அக்னேஸ்என்னும் நாமத்துடன் கன்னிகாஸ்திரீயானள். தெரேசம்மாள் கார்மேல்மடத்தில் சேர்ந்தபோது [illegible] றோர்சகோதரி [illegible]

ஓர் கன்னிகாஸ்திரீயாக இருந்துவந்தாள். பிந்தமற்ரேர் சகோதரியான செலினும் அவளுடன் மடத்தில் சேர்ந்துகொண்டாள். மற்றுமோர்சகோதரியான லெயோனியே மினவுதற்சபைக் கன்னிகாஸ்திரீயாயினள். பவுலின் மடத்துத் தலைவியான போது தெரேசம்மாள் ஏறக்குறைய ஐந்துவருடம் கார்மேல் [illegible] ஸ்திரீயாய் [illegible]னள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்
# அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

கடற்கரைத் தெருவிற் கணித்தாய்க் கட்டப்பட்டுள்ள புதுக்கோவிலில் திருச்சுரூபம் கொண்டெழுந்தருளிப் பலவகையான நோய்களாற் பீடிக்கப்பட்டோருக்கெல்லாம் பெரும்சகாயங்களைப் புரிந்துவரும் அற்புதவரத்தர் ஆராதிஷ்ட ஆரோக்கியநாதரின் வருடாந்ததிருநாட் கொண்டாட்டங்கள் இம்மாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி திங்கட்கிழமை பெரியபாடற்பூசையுடனும் திருச்சுரூப சுற்றுப்பிராகாரத்துடனும் முடிவாகும்.

**கவனிப்பு** :— காணிக்கை மெழுகுவர்த்திகள் கோவிற்பொறுப்பில் விற்கப்படுவதால், எவரும் கோவிலுக்கருகாமையில் மெழுகுதிரிவிற்க உத்தரவில்லை.

P. T. யேம்ஸ், O. M. I.
கட்டளைக்குரவர்

## சுகாதாரவார விழா

ஊர்காவற்றுறையிலே சென்ற 9-8-51 வியாழக்கிழமை அகில-இலங்கைச் சுகாதாரவாரவிழா கொண்டாடப்பெற்றது. பட்டின சங்கதலைவர் தலைமைவகித்தனர். காலை 9 மணிக்குப் பாடசாலைமாணவர்களின் ஊர்வலமும், 11 மணி தொடக்கம் 12 மணிவரையும் சுகாதாரமுறைப்படி அமைந்த போறணைதெரிதலும், தேநீர்க்கடை தெரிதலும், போசனசாலை தெரிதலும் நடைபெற்றன. பிற்பகல் 2 மணிதொடக்கம் 4 மணிவரையில் நல்வளர்ப்புடையஒருவயதுக்குட்பட்ட குழந்தைகட்கும், வைத்தியஉதவிபெற ஒழுங்காகவந்த குழந்தைகட்கும், மருத்துவஉதவிபெற ஒழுங்காகவந்த கர்ப்பஸ்திரிகட்கும் பரிசுத்தேர்வு நடைபெற்றது. 5 மணியளவிலே அர்ச். அந்தோனியார் கலலூரியில் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. சுகாதார வைத்தியர் டக்றர் பி. இராசசிங்கம் அவர்கள் சுகாதாரவாரத்தின் நோக்கத்தைப்பற்றியும், வைத்தியஅதிகாரி டக்றர் சி. எம். வன்னியசேகரம்அவர்கள் நோய்களையும், அவற்றைத்தடுக்கும் விதத்தைப்பற்றியும் எடுத்துரைத்தனர். தீவுப்பற்று வித்தியாதரிசி திரு. K. சிவபாதம்அவர்களும் சுகாதார விஷயமாகப் பேசினர். வண. பிலிப் பொன்னையாசுவாமிஅவர்கள் பேசியவிடத்து, அரசாங்கம் நமக்குஇலவசமாக உதவிஅளிக்கும்பொழுது அதைப்பயன்படுத்தாமல் இருப்பது மதியீனமாகுமென்று குறிப்பிட்டார். பின்னர் மாலை 6-30 மணியளவில் பாடசாலைமாணவர் மாணவிகளின் கதம்பக்கச்சேரி நடைபெற்றது. சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்ட பாட்டுகளும், நடனங்களும் நடைபெற்றுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அதிக திறமையுடன்நடித்த சென் மேரீஸ் கலாசாலை (ஊர்காவற்றுறை) மாணவிகளுக்குப் பரிசுக்கிண்ணம் வழங்கப்பட்டது. இரண்டாவது, மூன்ருவது பரிசுகளும் வழங்கப்பட்டன. ஈற்றில் தலைவர்அவர்கள் சமுகந்தந்தோர்க்கு நன்றிகூறியதுடன் விழா இனிதே முடிவுற்றது.

S. I. R.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 15-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
( லூக். 7 : 11—16 )

அக்காலத்தில் யேசுநாதர் நயீம்என்னும் நகரத்தைநோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவருடைய சீஷர்களும் திரளானசனமும் அவரோடு போனர்கள். அப்படியிருக்க அவர் நகரத்தின் வாசலைச் சமீபித்தபோது இதோ! தன் தாய்க்கு ஏககுமாரனகிய மரித்த ஒருவனை வெளியிற்சுமந்து கொண்டுவந்தார்கள். அவளோ விதவையாயிருந்தாள். நகரத்தாரில் வெகுசனமும் அவளோடிருந்தது. ஆண்டவர் அவளைப் பார்த்தமாத்திரத்தில் அவள் பேரில் சித்தமிரங்கி அவளை நோக்கி: அழாதே என்ருர். பின்னும் பாடையின் கிட்டப்போய் அதைத் தொட்டார். அதைச்சுமந்துகொண்டிருந்தவர்கள் நின்றுவிட்டார்கள். அவர் வாலிபனே! உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திருஎன்ருர். உடனே செத்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினன். பின்னும் அவர் அவனைத் தாயிடமளித்தார். ஆகவே எல்லோரும் பயம் அடைந்தார்கள். அல்லாமலும் சர்வேசுரனைத் துதித்து : பெரிய தீர்க்கதரிசி நமது நடுவே எழுந்தருளியிருக்கிருர் என்றும், சர்வேசுரன் தமதுசனத்தைச் சந்தித்தருளினர் என்றுங் கூறினர்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

—பசிபிக்யுத்தம் ஆரம்பமானபோது பறிமுதல்செய்தபின் இழந்துபோன அல்லது சேதமான நேசதேசங்களின் சொத்துக்கு நஷ்டபரிகாரமாக அடுத்த வருட வரவு–செலவுத்திட்டத்தில் ஆயிரம்கோடி யென் ஒதுக்கிவைக்க யப்பானியஅரசாங்கம் தீர்மானித்திருப்பதாக "நிப்பன் ரைம்ஸ்" பத்திரிகை அறிவித்திருக்கிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும் பரிசுத்தசெபமாலைத்தேவதாயார், அர்ச். அந்தோனியார், சந்தியோகுமையோர், அர்ச். யூதாததேயு இவர்களின் மன்ருட்டினலும் யான் கேட்டமன்ருட்டு அனுகூலமானதினல் நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். மேற்படி அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்கள் எங்கும் புகழப்படுவதாக.

D. M.

# கனவிலும் - நினைவிலும்

(வாழைக்குட்டி வரைவது)

அன்றிரவும் வழமைபோலப் படுக்கையில்சாிந்தேன். ஆனால், நெடுநேரமாகியும நித்திரையேவரவில்லை. இருகண்களையும் இறுக மூடிப்பார்த்தேன். அங்குமிங்குமாகப்புரண்டுபார்த்தேன். ஆனகெட்டித்தனமெல்லாம் செய்து பார்த்தும் யாதுபயனும் காணவில்லை. நித்திராதேவி கனவிலேதானும் என்னை நினையாது தூரநின்றுகொண்டாள். அதனால் பலவிதநினைவுகளும் கடலலைபோல ஒன்றின்பின்னென்றாக என்உள்ளத்தில் எழத்தொடங்கிவிட்டன. நான்கண்டதும், கேட்டதும், உண்டதும், உறங்கியதுமெல்லாம் அப்போது ஒரேகண்டநீளத்துக்குப் படக்காட்சிபோன்று என் மனத்திரையில் தோற்றமளித்தன. அதிகம் எழுதுவானேன்? முதலிலே என்நினைவில்வந்தது இதுதான்.

* * *

வாழைக்குட்டிகள்ஏற்றிய வண்டி ஒன்று தெருநீளம் சென்றுகொண்டிருந்தது. அத்தருணம் எனதுநண்பர்ஒருவருடன் அவர்வீட்டின் வெளிவாயிலில்நின்று ஓர்காரியத்தைப்பற்றி—(ஏதும்கலியாணம் கிலியாணத்தைப் பற்றியாக்குமென்று எவருமேதவறாக விளங்கிக்கொள்ளப்படாது; ஏனெனில், சிலவேளைகளில் நான் கலியாணத்தரகர்வேலையும் பார்க்கிறவன்.)—திரும்பவும் தொடங்குகிறேன், ஒரு காரியத்தைப்பற்றி, ஏன் அதையும் ஒளியாமல் சொல்லிவிடுகிறேன்—அரசியற்கருமத்தைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தேன். கதையோடு கதையாய் எனதுநண்பர் வாழைக்குட்டிகள் ஏற்றிச்சென்றவண்டியிலும் கண்ணெறிந்தார். ஏய், வாழைக்குட்டி என்று அழைத்துக்கொண்டு எட்டி நடந்துபோனார். யானும் கதையை விடப்படாதென்று அவர் பின்னால் இழுபட்டுக்கொண்டுபோனேன்.

* * *

நண்பர்கேட்டார், இவை என்ன, நல்லகுட்டிகளா? என்று. ஆம், ஐயா, நல்லகுட்டிகள், சொல்லவேண்டுமா? என்றான் வாழைக்குட்டிக்காரன். நீங்கள்வழக்கமாக அப்படித்தான் சொல்லுறது; நட்டு ஐந்தாறு மாதத்தில் குருக்கன் அடித்துவிடும்; பிறகு வெட்டித்தள்ள வேண்டியதுதான் என்றார் நண்பர். அப்போது அவன், நீங்கள்ஐயா, குட்டிகளை ஆழ நடுகிறீர்கள்; இனிமேல் அப்படி நடவேண்டாம்; மேலைநடுங்கள்; ஆழ நடுவதென்றால் ஆழமாக நடுவதல்ல கருத்து; ஆளநடவேண்டும். அதாவது ஆளுவதற்கு நடவேண்டும்; அப்படி ஆளநடுகிறதானால் மேலைநடவேண்டும்; அகலநடவேண்டும்—என்று ஊரிற்பட்டபுராணமெல்லாம் படிக்கத் தொடங்கினான் அந்தவாழைக்குட்டிக்காரன்.

* * *

ஆளநடு, மேலைநடு, அகலநடு என்று சொன்னதுடன் விட்டுவிட்டானா? அவன். அங்கே முத்துக்குமாருஐயாவுக்கு நான்கொடுத்த ஐந்துவாழைக்குட்டியையும் அவர்மேலைநட்டு, இப்போதுஅவைகள் நல்ல கூடலாகவளர்ந்து ஐந்தாறுபெரியகுலையும் வெட்டிப்போட்டார். தூரந்துலைக்குப் போவானேன்? உந்தாஅதிலே கண்டாச்கர் அம்மாவுக்குக் கொடுத்தகுட்டியள் உன்னைப்பார், என்னைப்பார் என்று நல்லஉரமாய்வளர்ந்து இப்போது குட்டிகுட்டியாகப்போட்டுக் குலைகுலையாய்த் தள்ளிக்கொண்டிருக்கின்றன; பொய்என்றால் ஒருக்கால் ஐயா! எட்டிப்போய்ப் பாருங்கள்என்று இப்படியாய் ஊரிலுள்ள எத்தனையோ ஐயாமார்கள், அம்மாமார்களின் பேர்களையெல்லாம் அடுக்கடுக்காக அரங்கத்திலே இழுத்துவிட்டான்.

* * *

ஐந்தாறுவாழைக்குட்டி எந்தவிதமும் விற்றுப்போடலாமென்று அவன் இந்தமாதிரியெல்லாம் அளந்துகட்டியும், எனதுநண்பர் வாங்கட்டோ, விடட்டோஎன்று யோசித்துக்கொண்டு இன்னமுமே ஒருமுடிவுக்கு வராததால், நேரம்போய்விட்டதென்று நானும் நேரேவீட்டுக்குத் திரும்பிப்போகையில் ஆளநடு, மேலைநடு, அகலநடுஎன்று சொல்லிக்கொண்டேபோனேன். ஊரிலிருந்து நான் தருவித்துநட்ட வாழைக்குட்டிகளும் அப்போது குருக்கன்அடித்துவிட்டன. உள்ளதைத்தான் சொல்லுகிறேன். அவைகளை நான் ஆழமாகத்தான் நட்டேன். அதனால் இனிநான் குட்டிகள்தருவித்தால் ஆழநடுவதா? ஆளநடுவதா? தாழநடுவதா? மேலேநடுவதா? அன்றேல் வாசகர்களின் அனுபவத்தை ஒருகால் கேட்டறிந்து நடுவதா? அடஇழவே! இந்த 'மவ்வளவு', 'கொம்பளவு' என்று இந்த ழ-உம், ள-உம் இருக்கப்போய் எவ்வளவுதடக்குப்பாடாய் இருக்கிறது? அகராதியை எத்தனைதரம் புரட்டிப்பார்க்க வேண்டியிருக்கிறது?

* * *

நானும் தமிழுலகில் ஒருஎழுத்தாளனாக வந்துவிடவேண்டுமென்று எத்தனையோநாள் என் தலையைப்போட்டு உடைத்தும், எழுதுகோலைக் கையில் எடுத்தும், எடாதஎடுப்பெல்லாம்எடுத்தும் அந்தஎழுத்தாளன்என்ற பெயருக்கும் எனக்கும் எட்டாம்பொருத்தமாகவே இருக்கிறது. எனது போசிரியர்களில்ஒருவர் அந்தநாளிலே, எழுதுகோலைக் கையில்எடுத்து எழுதப்பிடித்தாரேயென்றால், அதுதானாகவே எழுதிக்கொண்டுபோகுமென்று பலருஞ்சொல்லக்கேட்டு, அந்த எழுதுகோலில்தான் ஏதோமந்திரம் இருக்கிறதாக்குமென்று எண்ணிக்கொண்டு, ஓர்நாள் அதனைமுதலாய்க் கையிலெடுத்து எழுதிப்பார்த்தேன். ஆனால், எனக்கோ அது ஒருவரிதானுமே எழுதமாட்டேன் என்றுவிட்டது. ஏதோ அவருக்கு அடங்கிய குதிரையாக்குமென்று நினைத்துக்கொண்டு, ஈரும் பேரும்அறியாமல் அந்தப்படி இருந்தவிடத்திலேயே அதனை மெதுவாக வைத்துவிட்டு நின்றஇடமுந்தெரியாது நடந்துவிட்டேன்.

* * *

ஏதும் எழுதத்தான்வேண்டும்; எழுதிப் பழகத்தான்வேண்டும்; ஓடிப் பழகாதகுதிரை பந்தயம்ஓடுவது எங்ஙனம்? ஆடிப்பழகாதகூத்தை அரங்கத்தில்விடுவது எவ்விதம்? இப்படியெல்லாம் யோசித்தபின் கடைசியாக ஒரு முடிவுக்குவந்து, "பாதுகாவல"னில் தான் எனதுஎழுத்துப்பயிற்சியைத் தொடக்கவேண்டுமெனத் தீர்மானித்துவிட்டேன். பலதையும் ஒருமுறைக்குப்பலமுறை எழுதியேஎழுதிக் கிழித்தெறிந்ததில் என்கையே சலித்துப்போய்விட்டது. இதனையும் எவ்வளவோ அரும்பாடுபட்டுத் தவங்கிடந்துதான் எழுதினேனாக்கும். அப்படியெல்லாம் எழுதிமுடித்தபிறகு, எல்லாஞ்சரிதான், இதற்கு ஓர்பொருத்தமானபுனைபெயர் கொடுக்கவேண்டுமே; இதற்கு என்செய்வது? எல்லாரும் பொன்பூண யான்சும்மாவரைவது அழகாகுமா! எனக்கு ஒருவறையோடு தானும் வேண்டாமா? என்றயோசனை பிறந்தது. அதையும், இதையும் நினையடாவண்ணம் நினைத்துக்கொண்டிருந்ததில் பலநாள்கடந்துவிட்டது. இவ்வாறு பலதினங்களாகப் பரமசங்கடப்பட்டுக்கொண்டிருக்கையில், ஒருநாள் என்மனதிலே ஒரு மின்னலைப்போல எனது நல்லகாலத்துக்காக்கும் திடீரென வந்தது, அந்தவாழைக்குட்டி வியாபாரியை எனதுநண்பர் ஏ, வாழைக்குட்டியென்று அழைத்த ஞாபகம். சரி, அதுதான் எனக்குப்பொருத்தமான புனைபெயரெனக் கண்டுகொண்டு, "வாழைக்குட்டி" என்று வழங்கியிருக்கிறேன். இதிலும்அதிகம் பொருத்தமானபெயர் வேறேதும்இருக்குமென்று இப்போதைக்கு நான்நினைக்கவில்லை.

* * *

நித்திரைவராத அன்றிரவு இந்த வாழைக்குட்டிச் சம்பவத்தைத் தொடர்ந்து என்நினைவில் வந்தது, என்னவென்று எண்ணிப்பார்த்தபொழுது, என்மனதைப்போட்டு அலையாமல்உலையாமல் அது மிகஇலகுவில் என்ஞாபகத்துக்கு வந்துவிட்டதுதான் பெருங்காரியம். ஆம், பெரும்ஆனந்தம் உண்டுபண்ணும் அருமையான ஒருசம்பவம். அது நினைவில்வந்தபோது, அந்தஇரவில்முதலாய் எனது முகமும்அகமும் அந்தப்படியே மலர்ந்து பூரிக்கத் தொடங்கிவிட்டன. என்னபாக்கியமான ஒருகாட்சி! எத்துணை பரமானந்த காட்சி! அதிகம் அழுத்திக்கொண்டு போவானேன்? அடுத்தஇதழில் கட்டாயம் அதனை எடுத்துக்கூறிவிடுகிறேன்.

(தொடரும்)

---

## பாடசாலைக்கோணம்

**EDUCATIONAL PUBLICATIONS BOARD**

## NOTICE

**School Text Books**

Notice is hereby given to Heads of all Government and Assisted Schools and Managers of schools and all others concerned that it has been decided that there should be no change in the school text books now being used in the year 1952. The necessary legislation will follow immediately.

**Stanmore D. Weerasinghe,**
Secretary,
Educational Publications Board.

Malay Street. Slave Island,
August 10, 1951.

---

தலைமை ஆசிரியர்களுக்கு

## அறிவித்தல்

தற்பொழுது பாவிக்கப்படும் பாடப்புத்தகங்களையே 1952-ம் ஆண்டிலும் எவ்வித மாற்றமுமின்றிப் பாவிக்க வேண்டுமென்று வித்தியாதிபதி தெரிவிக்கின்றார்.

---

### வடகோறியாவின் சனத்தொகை

கோறியயுத்தம் நடைபெற்றுள்ள கடந்த பதின்மூன்று மாதங்களிலும் கம்யூனிஸ்த வடகோறியாவில் வசித்திருந்தசனங்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் தென்கோறியாவுக்குத் தப்பியோடியிருப்பதாய்க் கண்டறியப்பட்டிருக்கிறது. யுத்தத்துக்குமுன் வடகோறியாவில் சஞ்சரித்திருந்த 90 லட்சம் சனங்களில் 10 லட்சம் பேர் இறந்துவிட்டனரென்றும், 35 லட்சம் முதல் 40 லட்சம் பேர்வரையில் அகதிகளாகத் தென்கோறியாவிற்போய் அடைக்கலம் புகுந்துள்ளனரென்றும் அறிவிக்கப்படுகிறது. இன்னும் யுத்தத்தாலே வடகோறியாவிலிருந்துவந்த கைத்தொழில்யந்திர சாதனங்களில் அதிகமானவை முற்றாகஅழிக்கப்பட்டுவிட்டன. இன்று கோறியா தூரகிழக்கின் பேர்லின்நகரென அழைக்கப்படுகிறது. ஓர்நாடு ஆக்கிரமிப்பை எதிர்த்துநின்று சுதந்திரத்திற்காகப் போராடுமானால், அது என்னஉதவியை எதிர்பார்க்கமுடியுமென்பதற்கு ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமுயற்சி ஓர் உரைகல்லாயிருக்குமாம்.

---

## நாநா சங்கதிகள்

—போர்த்துக்காலின் பிரசாதிபதியாக 25 ஆண்டுகள்வரையில் இருந்து சென்றசித்திரைமாதம் காலஞ்சென்ற மாஷல் அன்ரோனியோ கார்மோனாவினிடமாகத் தெரியப்பெற்ற புதிய பிரசாதிபதியான ஜெனறல் பிரான்சிஸ்கோ லோப்பெஸ்அவர்கள் சென்ற 15-ந் திகதி விசுவாசப்பிரமாணஞ்செய்து தம்பதவியை ஏற்றிருக்கின்றார். இவர் 1926-ம்ஆண்டு முதல் அந்நாட்டிலே அதிகாரம்வகித்து வருகின்ற பிரதமரான டக்றர் சலாசரின் ஆட்சியை ஆதரிப்பாராவர்.

—யுத்தத்தின்பின் தொடர்பாக ஏழாம்முறையாய் இத்தாலிய பிரதமராகத் தெரியப்பெற்றிருக்கும் அல்சிடே டே காஸ்பெறிஅவர்களின் அரசாங்கத்தில் நம்பிக்கைதெரிவித்து அத்தேச பாராளுமன்ற அங்கத்தவர்கள் வாக்களித்திருக்கின்றார்கள். அவர்களில் 291 பேரும் அதற்குச் சார்பாகவும் 175 பேர் மாறாகவும் சம்மதியளித்தார்கள். செனற்சபை அங்கத்தவர்களிலும் 151 பேர் சாதகமாகவும், 101 பேர் பாதகமாகவும் வாக்களித்திருக்கின்றார்கள்.

—அமெரிக்க அரசாங்க பிரதிநிதித்துவ கோஷ்டிகள் சென்ற 1950-ம் ஆண்டு ஆடி மாதமுதல் இதுவரையிலே தென்கோறியாவில் கஷ்டநிவாரண சேவைகளுக்கும், தேவைகளுக்குமாக 35 கோடிடலர் பகிர்ந்துகொடுத்திருக்கின்றன. இதிலே 15 கோடி டலர் ஐ. நா. அதிகார மேற்பார்வையின்கீழ் கொடுபட்டுள்ளது. இத்துடன் 1 கோடியே 60 லட்சம் டலர் ஐ. நா. ஸ்தாபனத்தைச்சேர்ந்த பிறநாடுகளால் உதவப்பட்டிருக்கிறது.

—அமெரிக்கவரசு சென்ற ஆனி மாசம் 30-ந்திகதியுடன் முடிவான தனது அரசிறைவருடத்திலே 2,790 கோடி டலர் செலவில் ஆகாயவிமானங்களும், கப்பல்களும், தாங்கிகளும், போராயுதங்களும் கட்டத்தொடங்கியிருக்கிறது. இவைகள் உட்பட அமெரிக்கஅரசின் பாதுகாப்புப் பகுதியானது அவ்வருடத்திலே எல்லாமாக 3,530 கோடி டலர் செலவில் பல்வேறு இராணுவசாதனங்களையும் தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

—முதன்முதலாக முஸ்லீம்ஒருவரால் எழுதப்பெற்ற "யேசுக்கிறீஸ்துநாதரின் சீவியசரித்திர" புத்தகம் கெய்றோநகரிலே அடெல்ஹமிட் எல்சற்றார் என்பவரால் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது. அப்பிரமாணிய நூலையும், திருச்சபைப்பிதாக்கள் எழுதியவற்றையும், பாரம்பரியத்தையும், கோறானையும் மூலாதாரமாகக்கொண்டே அவர் இதனைஎழுதியிருக்கின்றார்.

—இன்னுஞ் சிலவருடங்களிலே சோவியற்அரசு அணுக்குண்டைக் கொண்டிருப்பது மாத்திரமல்ல, ஆனால், அமெரிக்கவரசைக்காட்டிலும் மிகப்பெரியதும், படிப்படியாகத் திருத்தமடைந்து கொண்டுவருவதுமான ஆகாயப்பலத்திலும் அபிவிர்த்தியடைந்திருக்குமென்று அமெரிக்கஆகாயப் படைப் பிரதம தளபதியான ஜெனறல் வன்டென்பேர்க் கூறுகின்றார்.

—கோறியாவிலே ஐக்கியநாடுகளின் படைகளுடன்சேர்ந்து போராடிக்கொண்டிருக்கின்ற துருக்கியபடையைப் பலப்படுத்துமாறு 1,800 துருக்கியபோர்வீரர்களைக்கொண்ட ஓர் புதிய பட்டாளம் இன்னுஞ் சிலதினங்களில் அங்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாய் அங்காராநகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

—யுத்தத்தின் தன்மைமுழுவதையுமே விரைவில்மாற்றிவிடக்கூடிய அணுச்சக்தியுடன்கூடிய பீரங்கி ஒன்றைக் கண்டுபிடித்துச்செய்து அமெரிக்க ஐக்கியதேச அரசாங்கபாதுகாப்புப்பகுதி பரிசோதனை நடத்தியிருப்பதாக "நியூஸ் வீக்" எனும் சஞ்சிகை கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஆவணிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 24 | அர்ச். பர்த்தலோமேயு | (சி) |
| சனி | 25 | அர்ச். பிரகாசர் | (வெ) |
| ஞா | 26 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 15-ம் ஞாயிறு—அர்ச். செபிரினப்பர் | (ப) |
| திங் | 27 | அர்ச். கலசாஞ்சியு சூசையப்பர் | (வெ) |
| செ | 28 | அர்ச். அகுஸ்தீன் | (வெ) |
| புத | 29 | அர்ச். ஸ்நாபகஅருளப்பர் தலைவெட்டுண்டதிருநாள் | (சி) |
| வியா | 30 | அர்ச். ரோசம்மாள் | (வெ) |
| வெ | 31 | அர்ச். பிறவாறெமூந்தப்பர் | (வெ) |

# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஆவணிமாதம் 23-ந் திகதி

## அரசியற் கட்சிகள்

இலங்கையிலே ஒல்லாந்தர் ஆட்சிசெய்துவந்த காலத்திலே 1726-ம் ஆண்டு பீற்றர் வைஸ்ற் என்பவன இங்கே ஒல்லாந்த தேசாதிபதியாக நியமனம் பெற்றுவந்தான். ஓர்கொடுங் கோலனகிய இவன் இலங்கையில் வந்திறங்கியபோது இச்சிறு நாட்டினை ஆளுவதற்கு ஒருகண் போதுமென்று சொல்லித் தனது கண்ணொன்றுக்கு ஓர் மூடியிட்டுக்கொண்டானும். அங்ஙனமாக, நமதுஸ்ரீலங்கா சுதந்திரமடைந்ததும் இதன் ஆட்சி சம்பந்தமாய்க் கடந்த சொற்ப காலத்துள் புற்றீசல்கள்போல் எழுந்திருக்கின்ற — இன்னமுமே நவமாக எழுந்துகொண்டிருக்கின்ற அரசியற் கட்சிகளைப்பற்றிச் சிந்திக்கும்போது, இந்தச்சிறியநாட்டினை ஆளுவதற்குத் தனது ஒற்றைக் கண்ணே போதுமென்று சொல்லி அந்த ஒல்லாந்ததேசாதிபதி தனதுகண்ணொன்றுக்கு மூடியிட்டுக்கொண்டானுமென்ற சம்பவம் நமதுஞாபகத்தில் வருவது ஆச்சரியமன்று. ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா குடியரசுக்கட்சி, மகாஜன பெருமுனகட்சி, சென்ற ஞாயிறு முதல் பிந்தியஇரண்டும் ஒன்றுசேர்ந்த மக்கள் குடியரசுக்கட்சி, பண்டாரநாயகாவின ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்க காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, நவலங்கா சமசமாஜகட்சி, புரட்சி லங்கா சமசமாஜகட்சி, கம்யூனிஸ்தகட்சி, தொழிற்கட்சி என்பனவாய் இதுவரை அநேக கட்சிகள் முளைத்துவிட்டன. இன்னுஞ்சில முளைக்கவிருக்கின்றன. "எங்கேயாவது ஓரிடத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் ஒருங்கே கூடிவிட்டால் அங்கேஒருகட்சி முளைத்துவிடுகிறது" என்று பததிரிகை ஒன்றில் அரசியல்நிருபர் எழுதியிருந்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்விதம் காளான்கள்போன்று பல்வேறு போக்கையும், பல்வேறுநோக்கையும் அடிப்படையாகக்கொண்ட அரசியற்கட்சிகள்—கட்சிபேதங்கள் தலைகாட்டுவதாலே குளத்தைக் கலக்குவதுபோன்ற பலனே நாட்டில்ஏற்படுவதாகும். அவைகள் சனங்களின் மனதைக் குழப்பி, அவர்களிடையே பலபிளவுகள், சச்சரவுகளை எழுப்பி, சமாதானத்தை நிர்மூலமாக்கி, நல்லரசுக்குப் புல்லுருவிகளாகி நாட்டினையே பாழாக்கிவிடும். அரசியற்கட்சிகள் ஓர்நாட்டிலே கதித்துக்கொண்டுவருவதானது அந்நாட்டிலுள்ள அரசியற்தலைவர்கள்மத்தியில் அபிப்பிராய பேதங்களும், சுயநலவாதங்களும், அதிகாரபதவிவேட்கைகளும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்பதற்குப் போந்த எடுத்துக்காட்டாகும். அடுத்த பாராளுமன்றப் பொதுத்தேர்தல் அண்மிக்கொண்டுவரும் இச்சந்தர்ப்பத்திலே வாக்காளர்கள் மிகுந்த விழிப்பாயிருந்து, அரசியற்தலைவர்களினதும், அரசியற் கட்சிகளினதும் சுயரூபத்தைச் சரிவரஆராய்வதும், சுயநலத்தைக் கவனியாது நாட்டின் பொது நலத்தையும், சுபீட்சத்தையும் ஆசித்துத் தங்கள்வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ள இப்போதே ஆயத்தப்படுவதும் அவர்கள்மேற்சுமந்த பாரமான கடனென்க.

## சுதேசவர்த்தமானம்

### குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருமாரின் வருடாந்தமுதற்பிரிவான ஞானஒடுக்கம் சென்ற 20-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஆரம்பமாயிற்று. அதிவண. ஏ. செறு சுவாமியவர்கள் ஞானஒடுக்க போதகஞ்செய்கின்றார். 40 குருமார்வரையில் சமுகங்கொடுத்திருக்கின்றனர். இந்தஞானஒடுக்கம் வருகிற 27-ந்திகதி திங்கட்கிழமைகாலை முடிவடைந்ததும் மறுநாள் 28-ந்திகதி செவ்வாய்க்கிழமைசாயந்தரம் இரண்டாவது பிரிவான ஞானஒடுக்கம் ஆரம்பமாகும்.

### சாராயக் குத்தகை விற்பனவு

யாழ்ப்பாண டிஸ்திறிக்கிலுள்ள சாராயத்தவறணைகளின் புதியஅரசிறைவருடத்துக்கான குத்தகைகள் விற்கப்பட்டபோது, குத்தகைப்பணம் நிகழும் அரசிறைவருடத்திலும் நூற்றுக்கு 25 வீதம்வரையில் அதிகரித்துள்ளது. சென்றவருடம் 3,34,840 ரூபாவாக விலைப்பட்ட தவறணைகள் இவ்வருடம் 3,76,840 ரூபாவாக விலைப்படலாயின.

### எஸ் எஸ். சி. மாணவர்கள்

சுவபாஷா எஸ். எஸ். சி. பரீட்சையில் அரங்கேறிய மாணவர், மாணவிகளாய் அறுபதினாயிரம்பேர் பேர்வரையில் வேலையில்லாது இருக்கின்றனரெனக் கூறப்படுவது ஆதாரமற்றதென்று கல்விமந்திரியார்தெரிவித்திருக்கின்றார். 1945-ம்ஆண்டு முதல் 50-ம் ஆண்டு வரையில் இப்பரீட்சையில் அரங்கேறியவர்கள் 14,363 ஆண்களும், 12,627 பெண்களுமாக 26,990 பேராவர். இவர்களில் பதினையிரம் பேரை வித்தியாபகுதியே எடுத்துக்கொண்டது. இவர்களில் ஏறக்குறைய 1,650 பேர் அரசினர்பாடசாலைகளிலும், 1,600 பேர் உதவிப்பணம்பெறும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களாய் இருக்கின்றனர். 2,707 பேர் ஆசிரியபயிற்சிக் கல்லூரிகளில் சேர்ந்திருக்கின்றனர். ஆசிரிய தராதரப்பத்திர பரீட்சையின் முதலாவது அல்லது இரண்டாவது பகுதியில் அரங்கேறியவர்களில் 250 பேர் உடனுக்குடனே வேலைகொள்ளப்படவிருக்கின்றனர். இன்னும் சுவபாஷா எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகளில் 1,500 பேர் விவாகஞ்செய்துவிட்டரென மதிப்பிடப்படுகிறது. வருங்காலத்திலே ஆசிரியபயிற்சிக்கல்லூரிகள் வருடம்ஒன்றுக்கு ஆயிரம்பேர்வரையில் எடுக்கக்கூடியனவாகும். இன்னும் அநேகர் பொலிசிலும், பட்டாளத்திலும், ஆகாயப்படையிலும், கடற்படையிலும் சுவபாஷா கிளாக்குமாராகவும், அரசாங்க சேவையிலே தலைமைக்காரர், ஆஸ்பத்திரி அற்றெண்டண்மார், ஆரம்பநேர்ஸ்மார், மருத்துவமாதாராகவும் வேலை கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

### அரசாங்க நெசவு தொழிற்சாலை

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே சென்றவியாழக்கிழமை அரசிறைவரவு-செலவுத் திட்டவிஷயம் கலந்து ஆலோசிக்கப்பட்டபோது, கைத்தொழில் மந்திரியார் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் தெரிவித்திருப்பது வருமாறு: ஓர் நெசவுதொழிற்சாலையும், ஓர் சீனித்தொழிற்சாலையும் அமைக்கும்விஷயமாய்க் கூடியதன்மை அளித்திருக்கிறேன். நெசவுதொழிற்சாலைமட்டிலே இந்தியஅரசாங்கத்தின் ஆலோசனையைக்கேட்டு அதன் நன்மதியைப் பெற்றிருக்கிறேன். இலங்கையிலே பருத்தி நெசவுதொழிற்சாலை ஒன்றை அமைப்பதுபற்றி ஓர் அறிக்கை சமர்ப்பித்து, அதனை மந்திரிசபை அனுமதித்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கென ஏற்படவிருக்கும் செலவுமதிப்பு 1 கோடியே 70 லட்சம் ரூபாவாகும். கடுதாசித் தொழிற்சாலையை அமைப்பதற்கான ஆராய்ச்சிபூர்த்தியாகிவிட்டது. அதனை ஆரம்பிப்பதற்கான யந்திரசாதனங்கள் விரைவிலேவந்துசேரவிருக்கின்றன. தாவரஎண்ணெய்த் தொழிற்சாலைவிஷயமாயும் பணம் அனுமதிக்கப்பட்டுவிட்டது. இதற்குரிய யந்திரசாதனங்களும் சமீபத்தில் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கானலும் காட்டுயானைகளும்

வடமத்தியமாகாணம் முழுவதிலும் மற்றும் ஓர்தரம் கடுங்கானல் உண்டாய் எல்லாம்வரண்டுபோகின்றன. தண்ணீர் மிகஅருந்தலாகிவிட்டது. காட்டுமிருகங்கள் உணவும் தண்ணீருந் தேடிச் சனங்கள்வசிக்கும் பகுதிகளில் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றன. அநேகபகுதிகளிலே உணவுப்பயிர்களுக்கு அதிகம்சேதம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. காட்டுப் பாதைகள்வழியாகச் செல்லவேண்டிய பிள்ளைகள் அப்பாதைகளில் காட்டுயானைகள் அடிக்கடி தலைகாட்டுவதாலே பாடசாலைக்குப்போகாது நின்றுவிடுகிறார்கள். பொல்லனறுவைப்பகுதியிலே கிராமவாசிகளுக்குப் பெருஞ்சங்கடத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் காட்டுயானை ஒன்றைக் சுட்டுக்கொல்ல அம்மாகாண ஏசன்றர் அனுமதியளித்திருக்கின்றார். சென்றவாரத்தில் ஓர் நாள் ஏறக்குறைய 40 காட்டுயானைகளைக்கொண்ட கூட்டம்ஒன்று மதவாச்சிப்பிரிவைச்சேர்ந்த கடவத்காமா எனுமிடத்துப் புத்தகோவில் வளவினுள்புகுந்து தோட்டங்களுக்குப் பெருஞ்சேதம் உண்டுபண்ணிற்று.

### வியாபாரிகளின் ஏமாற்றம்

இலங்கைக்கென்று பதினையாயிரம் மூடை செத்தல்மிளகாய் ஏற்றிய கப்பல் ஒன்று சென்ற 12-ந்திகதியன்று எதிர்பாராதவிதமாகக் கொழும்புத் துறைமுகம் வந்துசேரலாயிற்று. அதனால் மிளகாய்விலை திடீரென அந்தர் ஒன்று 178 ரூபா 80 சதத்திலிருந்து 130 ரூபாவாக இறங்கலாயிற்று. மிளகாய் அருந்தல் காரணமாக அந்தர் ஒன்று 178 ரூபா 80 சதமாக இருந்துவந்தவிலை கப்பல் துறைமுகத்துள்வந்ததும் 150 ரூபாவாக இறங்கியது. பின்னர் கப்பலிலிருந்து மிளகாயை இறக்குமதிசெய்ததும் 139 ரூபாவாக இறங்கியது. அதன்மேல் இரண்டொரு நாளில் 135 ரூபாவாயிற்று. அதனால் கூடியவிலையில்விற்று அதிகஇலாபம் பெற எண்ணியிருந்த வியாபாரிகளுக்கெல்லாம் பெரியஏமாற்றம் உண்டாயிற்று.

### புதியகமப்பாடசாலைகள்

ஆண்களுக்குப் பதினொன்றும், பெண்களுக்கு இரண்டுமாகத் தற்போது 13 கமப்பாடசாலைகள் இருந்துவருகின்றன. கமத்தொழிலிலேபிழைப்புக்குரியபயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற புதியகல்விக்கொள்கையின்கீழ் தேவைப்படும்வசதிகளை அளிக்குமாறு இரத்தினபுரி, பிபிலே, ருகன்கலா, காகமஎனுமிடங்களில் ஆண்களுக்கென நான்கும், அப்டுவாவிலே பெண்களுக்கென ஒன்றுமாக மேலும் ஐந்து கமப்பாடசாலைகளைத் திறப்பதற்கான திட்டங்கள் செய்யப்படுகின்றன. இப்பாடசாலைகளின் நோக்கம், அதிகம் நவீனமாதிரியான செய்கைமுறைகளைப்பயிற்றுவதும், இக்காலத்துக்குரிய ஓர் கமக்காரனுக்குத் தேவைப்படும் அறிவை ஊட்டுவதும், இரண்டொரு குடிசைக் கைத்தொழில்களையும் பயிற்றிவிடுவதுமேயாகும். இப்பாடசாலைகளுக்கென வித்தியாபகுதியால் தெரிவுசெய்யப்பெற்ற ஆசிரியர், ஆசிரியைகள்ஏலவே போதனையிலும், குண்டாசேலிலும் கமத்தொழிற்பகுதியால் கமத்தொழில் பயிற்சியளிக்கப்பட்டுவருகிறார்கள்.

### உணவப்பொருட்களின் நிலைமை

இலங்கையிலே உணவுப்பொருட்களின் நிலைமை இப்போதுபோல அத்துணை திருப்திகரமாய் முன்னர் எப்போதுமே இருந்ததில்லையென்று உணவுத் தலைவரான திரு. கே. ஆள்வாப்பிள்ளை கூறுகின்றார். தற்சமையம் இருப்பிலே நாலரை மாதங்களுக்குப் போதிய அரிசியும், இருமாதங்களுக்குப்போதிய மாவும், சீனியும் இருப்பதாகவும், சிலஉணவுப்பொருட்களை இறக்குமதிசெய்வதில் கப்பற்சலார் வீதங்கள் குறைந்திருப்பதாகவும், இன்னும் பர்மாவிலிருந்து பெருந்தொகையான பருப்புகளும், மத்தியகிழக்கு நாடுகள், ஒல்லாந்திலிருந்து உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயமும் வந்துகொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### குறைந்தசலாரில்பிறப்புப்பத்திரம்

சுவபாஷா பாடசாலைப் பிள்ளைகளிடமிருந்து பிறப்புப்பத்திர பிரதி ஒன்றுக்கு 2 ரூபா 50 சதம் அறவிடப்படும் வழக்கத்தை றெஜிஸ்ரார் ஜெனறல் நிறுத்திவிட்டிருக்கின்றார். ஆங்கில, சிங்கள, தமிழ்ப்பாடசாலைகள் எதிலும் படித்தாலுஞ்சரி, பாடசாலைப் பிள்ளைகள் எல்லாரும் தற்போது 50 சதத்துடன் பிறப்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் முறையிடு செய்துகொண்டதின்பேரில் றெஜிஸ்ரார் ஜெனறல் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

### தலைமைக்காரரும் மதுவிலக்கும்

அகில—இலங்கைத் தலைமைக்காரரின் ஐக்கியசங்கமானது 3,500 பேருக்கு மேற்பட்ட தனது அங்கத்தவர்கள் மத்தியிலே மதுவிலக்கு இயக்கம் ஒன்றைத் தொடக்கியிருக்கிறது. மதுபானபாவனையைக் கைவிட்டுத் தாங்கள் முந்த ஓர் நன்மாதிரிகை காண்பிக்கிறவரையிலே மதுபானத்தை விலக்கும் விஷயமாய்க் கிராமவாசிகளை உடன்படச்செய்ய முடியாதென்பதை நன்குணர்ந்து அச்சங்கத்தின் கொழும்புக் கிளையைச்சேர்ந்தவர்களான முன்னூறுபேருக்கு மேற்பட்ட தலைமைக்காரர் சென்ற 12-ந்திகதிகூடி இனிமேல் தாங்கள் மதுபானத்தையே தொடுவதில்லையெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

---

—அமெரிக்க ஐக்கியதேச அரசாங்கமும், பிலிப்பைன்ஸ்நாட்டு அரசாங்கமும் ஓர் பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்துகொள்ளச் சம்மதித்திருக்கின்றன. அதன்படி, ஒரு நாட்டின்மீது பிறநாடுஒன்று படையெடுப்பதானது, மற்றதின் சமாதானத்திக்கும், சேமத்துக்கும் ஆபத்தாகக் கருதப்படுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யப்பானிய சமாதான உடன்படிக்கை

யப்பானிய சமாதான உடன்படிக்கையின்படி போனிஸ்தீவும், நியுகியுதீவும் மீண்டும் யப்பானின் ஆட்சிக்குள் வருமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதென அதன்பிரதமரான யோஷிடா அவர்கள்யப்பானியபாராளுமன்றத்தின் விசேஷகூட்டத்தில் அறிவித்திருக்கின்றார். அடுத்தமாதம் 4-ந்திகதி சான்பிரான்சிஸ்கோநகரில் கைச்சாத்திடப்படத் தயாரிக்கப்பட்டிருக்கும் உடன்படிக்கையை அவர் ஆதரித்துப்பேசிய போது, தமதுஎதிர்கால அரசியல்வாழ்வில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

உடன்படிக்கையிலுள்ள சாதகமான ஆறு அம்சங்களையும் அவர் பின்வருமாறு எடுத்துக்கூறினார்.

(1) உடன்படிக்கை யப்பானுக்குப் பூரணஆதிபத்திய உரிமையளிக்கிறது.

(2) அதில் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படவில்லை.

(3) சமாதானஉடன்படிக்கையுடன் யப்பான் அமெரிக்க ஐக்கியதேசத்துடன் பாதுகாப்புஒப்பந்தமொன்றும் செய்துகொள்ள விருப்பதால், வெளிநாடுகள் யப்பானை ஆக்கிரமிக்காதபடி யப்பானுக்குப் பாதுகாப்பு இருக்கும்.

(4) போனிஸ், நியுகியு தீவுகளின் ஆட்சி மீண்டும் யப்பானிடம் ஒப்புவிக்கப்படும் என்ற நம்பிக்கைக்கு உடன்படிக்கை இடமளிக்கக் கூடியதாய் இருக்கிறது.

(5) ரூஷியாவிலும், கம்யூனிஸ்த சீனாவிலுமுள்ள யப்பானிய பிரசைகள் யப்பானுக்குத் திருப்பியனுப்பி வைக்கப்படவேண்டுமென்ற நிபந்தனை உடன்படிக்கையிலிருக்கிறது.

(6) அமெரிக்கஅரசு தனக்குச் சமமான அந்தஸ்துடையநாடாக யப்பானைக் கருதுகிறது. அது யப்பானை எவ்விதத்திலும் மேற்பார்வையிடுவதான ஏற்பாடெதையும் செய்யவில்லை.

பிரதமர் இந்தஆறு அம்சங்களையும் வெளியிட்டு மேலும் கூறியதாவது: சமாதான உடன்படிக்கையின்படி, யப்பான்மீது ஏனையநாடுகள் சமத்துவமும், நம்பிக்கையும் பாராட்டுவதாகவிருந்தபோதிலும் யப்பான் ஓர் தோல்வியுற்ற நாடுஎன்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆதலால் உடன்பபடிக்கையில பிரதேசங்கள் சம்பந்தமாகவும், பொருளாதாரசம்பந்தமாகம் அமைக்கப்பட்டுள்ளவிதிகளை நாம் வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையானது தாராளமானதும், நியாயமானதுமாக உள்ளதென்று நான் துணிந்துகூறுவேன். இவ்விதமான தாராளஉடன்படிக்கை இதுவரை சரித்திரத்திலேயே ஏற்பட்டதில்லை. எதிர்காலத்தில் யப்பான்மீது இதரநாடுகள் கொண்டுள்ள நம்பிக்கையின் சின்னமாக இந்தஉடன்படிக்கை திகழ்கிறது.

நிற்க, யப்பானுக்கு மீண்டும் ஆதிபத்தியஉரிமை அளிக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்வதான, திருத்தி அமைக்கப்பட்ட யப்பானியசமாதான உடன்படிக்கையின்நகலைச் சென்ற 15-ந்திகதி அமெரிக்காவும் பிரித்தானியும் பிரசுரஞ்செய்தன. சோவியத் ரூஷியாவின் யோசனைகளும, இந்தியாவின் யோசனைகளும் திருத்தப்பட்டநகலில் சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன. யப்பான் ஆயுதசுவீகாரணம்செய்வது கட்டுப்படுத்தப்படமாட்டாது என்று உடன்படிக்கையில் கண்டுள்ளவிதியை ரூஷியா ஆட்சேபித்திருந்தது. யப்பானில் படைகளை வைத்திருக்குமஉரிமை நேசநாடுகளுக்கு இருக்கவேண்டுமென்ற நிபந்தனையை இந்தியா ஆட்சேபித்திருந்தது. இந்தஉடன்படிக்கை புரட்டாசி மாதம் 4-ந்திகதியன்று சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறும். 52 நாடுகளின் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படும். அப்பொழுது அது விவாதிக்கப்பட்டுக் கைச்சாத்திடப்படும். இந்தஉடன்படிக்கையைத் தயாரித்த திரு. டல்லஸ் அன்றுவாஷிங்ரனில் திருத்தப்பட்டநகல் பிரசுரிக்கப்பட்டபோது யப்பானுடன்போரிட்ட நாடுகளில் பெரும்பான்மையானநாடுகள் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதுநிச்சயம் என்பதற்கான அறிகுறிகள் இருப்பதாகப் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவிக்கின்றார்.

### சோவியற் ருஷியாவின்
## உலக சமாதானப் போர்வை

இருவித இலட்சியப் பாதைகளில் சென்றுகொண்டிருக்கும் உலகின் இருகோஷ்டிகளுக்கிடையே நாளுக்குநாள் பிளவுகள் அதிகரித்து வருகின்றன. அவைகளிடையே நடைபெற்றுவரும் 'கெடுபிடி யுத்தமும்' மும்முரமாகிவருகிறது. இந்தயுத்தம் உலகயுத்தமாக மாறக்கூடியநிலைமையும் அடிக்கடி ஏற்படுகின்றது. பசுத்தோல்போர்த்திய புலியைப்போன்று ரூஷியா உலகசமாதானம்என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு உலகை ஆக்கிரமிப்பதற்கான பெரும்பலத்தைத் திரட்டிவருகிறது. அதேசமயத்தில் அமெரிக்காவின்தலைமையில் உலகசுதந்திரநாடுகளும், சுதந்திரத்தைப் பாதுகாத்து ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காக ஆயுதசுவீகாரணம்செய்வதில் ஈடுபட்டுள்ளன. ஆகவே, இப்பொழுது நடைபெற்றுவரும் கெடுபிடி யுத்தமானது ஓர் எரிமலையைப்போன்றது. அது எப்பொழுது வெடித்து உலகயுத்தம் என்ற அக்கினிக்குழம்பைக் கக்கப்போகிறது என்பதை எவராலும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

ஆனால், அமெரிக்க வட்டாரங்களில் உலகநிலையைக்கவனித்து வருகிறவர்களிடையே பின்வருமாறு அபிப்பிராயம் நிகழ்கின்றது. ரூஷியா கடைசியாக விடுத்துள்ள சமாதானகோரிக்கையானது, அது சமீபத்தில் எடுத்துக்கொள்ளவிருக்கும் ஓர் நடவடிக்கையை மறைப்பதற்காகவே விடுக்கப்பட்டதாகும். அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் யப்பானிய சமாதான உடன்படிக்கை மகாநாட்டில் கலந்துகொள்ளும்ரூஷியா உலகசமாதானத்துக்காக ஐம்பெரும் வல்லரசுகள் மகாநாடுகூடவேண்டுமென்ற தனது கோரிக்கையை வற்புறுத்தி அம்மகாநாட்டை முறிப்பதற்கு முயலக்கூடும். யூகோசிலேவியாவை ஆக்கிரமிக்க ரூஷியா முயற்சிக்கும். யூகோசிலேவியாவின் அண்டை நாடுகளாய் ரூஷியாவுக்கு வால்பிடிக்கும் ஹங்கேரி, செக்கோசிலவாகியா, ரூமேனியா, போலாந்து ஆகியநாடுகள் அதன் எல்லைப்புறங்களில் அத்துமீறிய நடவடிக்கைகள்எடுத்து அதற்குத்தொல்லை விளைத்து வருகின்றன. அதனை ஆக்கிரமிக்கும்படி ரூஷியா இந்தப்பால்கன்நாடுகளைத் தூண்டக்கூடும். இவ்வாறு பால்கன் பிரதேசத்தில் ஏற்படும் நெருக்கடியான நிலைமை ஐரோப்பாவைப்பாதித்து இறுதியில் உலகயுத்தமாக மாறவும்கூடும். இவ்வித அபிப்பிராயங்களே அமெரிக்காவில் நிலவிக்கொண்டிருக்கின்றன.

கெடுபிடி யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு யுத்தஒழிப்பு உடன்படிக்கை செய்துகொள்ள ஐந்துவல்லரசுகளின் மகாநாடு கூடவேண்டுமென்று யோசனைகூறிச் சோவியற்சபைத் தலைவர் நிக்கலாய் ஷெவர்ணிக் அமெரிக்க ஜனாதிபதி ட்றூமனுக்கு ஓர் கடிதம் அனுப்பியிருக்கிறார். ஆனால், ரூஷியா கடைப்பிடித்துவரும் கொள்கைகளையும், எடுத்துவரும் நடவடிக்கைகளையும் கவனிக்குமிடத்து, அது உண்மையில் உலகசமாதானத்தை விரும்புகிறதென்று எவரும் நம்பமுடியாது.

கேசோங் மகாநாட்டின் போக்கு எதிர்பார்த்தபடியே இருக்கிறது. முடிவின்றி மகாநாடு நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. நான்குதடவைஏற்பட்ட பெரியதத்துகளையும்கடந்து அது இன்னும் உயிர்பெற்றிருப்பது ஓர் ஆச்சரியமே. கம்யூனிஸ்தர்கள் வழக்கம்போல் தங்களது தந்திரமான நடவடிக்கைகளையே கைக்கொண்டுவருகிறார்கள். இப்பொழுது கடைசியாக ஒரு தகராறு ஏற்பட்டுள்ளது. ஐ. நா. பிரதிநிதிகள் தற்சமயம் இருதரப்புகளினதும் இராணுவமுன்னணிகளை எல்லையாகக்கொண்டு 20 மைல் அகலமுள்ள பகுதியை இராணுவமற்ற பிரதேசமாக்கவேண்டுமென்று கோரினர். ஆனால், கம்யூனிஸ்தர்கள் 38-வது ரேகை எல்லையோடு பன்னிரண்டரை மைல் அகலமுள்ள பகுதியையே நடுநிலைமைப் பிரதேசமாக்க வேண்டுமென்றுகோரினர். கம்யூனிஸ்த கோரிக்கைக்கு இணங்கினால் ஐ. நா. படைகள் இப்போதுள்ள இடத்திலிருந்து பின்வாங்கவேண்டியிருக்கும். இச்சந்தர்ப்பத்திலே நடுநிலைமைப் பிரதேசமான கேசோங்கில் அத்துமீறிக் கம்யூனிஸ்த படைகள் நடமாடின. இத்தவறைக் கம்யூனிஸ்துகள் ஒப்புக்கொண்டனர். இதன்பயனாகக் கேசோங் பிரதேச நடுநிலைமைக்கொள்கையைமேற்பார்வைசெய்ய ஒருகமிஷனர் நியமிக்கவேண்டுமென்று ஐ. நா. பிரதிநிதிகள் இப்பொழுது ஒருகோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர். கண்ணியமானமுறையில் சமரசம் ஏற்படவேண்டுமென்பதே யாவரதுவிருப்பமுமாகும்.

### அன்னக்குட்டியின்
## அக்கினிப் பரீக்ஷை

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

டுக்குஓடி என்பெட்டியைத்திறந்து வேறுஒருஉடுப்பை எடுத்துக் கால்தெரியாமல் இழுத்துப் போட்டுக்கொண்டேன்.

அப்போது பெரியம்மாவுக்குக் காய்ச்சல். 'ஏன் இப்போது உடுப்புமாற்றுகிறாய்?' என்றார்கள். 'காலில்கொஞ்சம் நெருப்புப்பட்டுவிட்டது' என்றேன். இதற்குள்நிற்கமுடியாமல்மயங்கி விழுந்துவிட்டேன். பெரியம்மாவும் உடனே ஓடிவந்து பெரிய கூப்பாடு போட்டார்கள். சனங்கள்கூடிவிட்டார்கள். பள்ளிக்கும் செய்திஎட்டவே பிள்ளைகளும், ஆசிரியரும் என்னைப் பார்க்க வந்துவிட்டனர். என் காலிலுள்ள தண்டைகளைத் தட்டான்வந்து கழற்றவேண்டியதாயிற்று. சிலதினங்களில் புண் விரிந்து சீழ்பிடித்துவிட்டது. கால்விரல்கள்சேர்ந்து ஒரே புண்ணாகிவிட்டது. அதிகம் சொல்வானேன். எங்கள் வீட்டுக்குமுன்னால்உள்ள தெருவில் போகிறவர்கள் மூக்கைப்பிடித்துக்கொள்ளாமற் போகமுடியாதாம். என்னைப் பார்க்கவந்த எனதுஅத்தான் நாற்றம் பொறுக்கமுடியாது மயக்கம் வந்து வீழ்ந்துவிட்டாராம். இந்தக்காலத்தில் என்உடலில்உண்டானவேதனை எத்தகையது! இவைகளையெல்லாம் யேசுநாயகருக்காகவே அனுபவித்தேன். அவரைஅடையும் ஆசையே இவற்றைச்சகிக்க ஏதுவாயிருந்தது. புண்கள் ஆறுவதற்கு மூன்றுமாதங்கள் ஆயின. என் காலிலுள்ள தழும்பைப்பார்த்து அநேகர்அரோசித்தனர். இது பெரியம்மாவுக்குப் பெரியமனவருத்தம். புண் ஆறியும் தீபட்ட தழும்பு மாறவில்லை. இதிலிருந்து கலியாணப்பேச்சும் அதிகமாகஎழவில்லை... அன்னக்குட்டி எனும் இந்தப் பெண்மணி யார்? இந்தியாவெங்கும் இன்றுபேராய் அறியப்பெற்றுக் கொண்டாடப்பட்டு வருகின்றசங். அல்போன்ஸாஎனும் கன்னிகாரத்தினமே.

## 100 ஆண்டு இயக்கம்

நமது பரிசுத்த தேவஅன்னை தன் மரணத்தின்பின் ஆத்துமசரீரத்துடன் மோட்சத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டாள் என்னும்சத்தியத்தை, விசுவாசிகள் திருச்சபையின் ஆரம்பத்தில் விசுவசித்துவந்தனர். ஆயினும் திவ்விய யேசுவின் பிரதிநிதிகளான பாப்புமார்கள் இச்சத்தியத்தைப்பற்றி அதிகாரபூர்வமாய் 1950-ம் ஆண்டுவரை ஒன்றும் தெரிவிக்கவில்லை. இச்சத்தியத்தை வேதசத்தியங்களில் ஒன்றுஎனத் தவறுவரம்பெற்ற பாப்பானவர் பிரகடனம்செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் சுமார் 100 வருடங்களுக்குமுன் திருச்சபையில் ஒருஇயக்கம் ஆரம்பமாயிற்று. இவ்வியக்கத்தைப்பற்றிய சிலகுறிப்புகளை எடுத்துரைத்தலே இச்சிறு கட்டுரையின் நோக்கமென்க.

1849-ம் ஆண்டு பெல்ஜியத்திலிருந்த மேலின்ஸ் அதிமேற்றிராணியாரும், ஸ்பெயினிலிருந்த ஓஸ்மாமேற்றிராணியாரும் தேவமாதாவின் மோட்ச ஆரோபணம் வேதசத்தியங்களில் ஒன்றாயிருக்க வேண்டுமெனக்கருதி, அப்போதிருந்த 9-ம் பத்திநாதருக்கு இரண்டுவிண்ணப்பங்களை அனுப்பினார்கள். பின்னர் பெயாதுஸ் கிளாறெட் என்ற அதிமேற்றிராணியாரின் தூண்டுதலினால், அப்பொழுது ஸ்பானிய நாட்டைஆண்ட 2-ம் இசபெல்லா என்றஅரசி 1863-ம் வருடம் மார்கழி மாதம் 27-ம் தேதி பாப்பானவருக்கு ஒருவிண்ணப்பம் அனுப்பிவைத்தாள். 9-ம் பத்திநாதரும் அரசிக்கு அன்புமொழிகளினால் பின்வருமாறு பதிலளித்தார்: "இவ்வேதசத்தியம் சகல விசுவாசிகளினாலும் நம்பப்படுகிறது. இது ஒருதேவஇரகசியம். இதை விசுவாசசத்தியமாக வெளிப்படுத்த நாம்தகுதியற்றவர். ஒருகாலம் வரும். அன்று உமதுவிருப்பமெல்லாம் பூர்த்தியாகும். எனினும் அதுபரியந்தம் செபம்செய்யுங்கள்."

அலோய்சியஸ் வக்காரிஎன்ற குருவானவர் ஏறக்குறையத் தமது சீவியகாலமுழுவதையுமேசெலவிட்டுத் தேவ அன்னையின்மரணம், மோட்சத்துக்கு ஆரோபணம் முதலியவற்றைப் பற்றி நன்குஆராய்ந்து, தமதுமுடிவுகளைச் சகல கத்தோலிக்கருக்கும் எடுத்துரைத்தார். ஆனால், இங்கிலாந்தில் சிலர் இதற்குமாறாகப் பிதற்றிக் கொண்டு அலைந்துதிரிந்தனர். உடனே சில்வெஸ்றர் ஜோசேப் ஹன்றர் என்ற யேசுசபைக் குருவானவர் 1869-ம் ஆண்டு ஆடிமாதம் 30-ந் தேதி நடந்த ஒருபெரியசங்கத்தில் மிகத் திறமையுடன்பேசி எதிரிகளை அடக்கினார். மேலும் அங்குகூடியிருந்த 113 சிரேஷ்டர்களும் கையொப்பமிட்டு ஹன்றர் சுவாமியார்கூறியதை ஆமோதித்தனர். இவ்வாறிருந்தும் விரோதிகள் இதோடு தொலையவில்லை. பிரான்ஸ், ஜேர்மனி முதலியநாடுகளிலும் இவ்வேத சத்தியத்திற்கு விரோதமாகப் பலகட்சிகள் தோன்றிக் காட்சிஅளித்தன. பல நிகழ்ச்சிகள்எழும்பித் தலைகாட்டின. என்றாலும்அவர்கள் எண்ணியகாரியம் சித்திபெறவில்லை.

(தொடரும்)

திவ்வியபூசையின் மகத்துவம்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.
பிரதி விலை ருபா 2-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அச்சிஸன் அழைக்கிறர்

— வாஷிங்ரன்

சோவியற்அரசாங்கம் தனக்குச் சமாதானத்தில் ஆர்வமிருக்குமாயின் அதை வாய்ச்சொற்களோடு நிறுத்திக்கொள்ளாமல் அனுஷ்டானபூர்வமாக வெளியிடவேண்டும்என்பதே முக்கியமானது. அதற்காகஅது ஐ. நா. ஸ்தாபனத்துடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டுமந்திரி டீன் அச்சிஸன் செய்திநிருபர்கள்கூட்டத்தில் கூறியிருக்கிறர். ஜனாதிபதி ட்றூமனுக்கும், சோவியற்ஜனாதிபதி ஷ்வார்னிக்குக்குமிடையே நடந்துள்ள கடித, தீர்மானபரிவர்த்தனையைக் குறிப்பிட்டே அச்சிஸன் இந்தஅபிப்பிராயம் தெரிவித்திருக்கிறர். சென்றமாதம் 7-ந் தேதி ட்றூமன்அனுப்பிய குறிப்புகளுக்கு இப்போதுதான் ருஷியா "பிரசாரத்தையே குறியாகக் கொண்ட" பதில்குறிப்புகளை வெளியிட்டுள்ளது. ருஷியா குறிப்பிடும் "ஐந்துவல்லரசுகளின் சமாதான ஒப்பந்த"த்தை அலசுகையில், "ஐந்தென்ன? ஐ. நா. ஆதரவில் அறுபது நாடுகள் சமாதானமாக ஒத்துழைப்பதென உடன்பட்டிருக்கின்றனவே?" என்றும் அச்சிஸன் சுட்டிக்காட்டியிருக்கிறர்.

## ஆசிய-அமெரிக்க நல்லுறவு

— வாஷிங்ரன்

ஆசிய-அமெரிக்க நல்லுறவைவளர்க்கும் பணியிலே இருகண்டங்களையுஞ் சேர்ந்த தேசத்தலைவர்களும் மனம்விட்டுக்கூறுகின்ற யோசனைகள் பிரபல அமெரிக்க இலக்கிய சஞ்சிகையான "சற்றர்டே றிவியூ அவ் லிற்றரெச்ச"ரின் சமீபஇதழில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தச்சஞ்சிகையின்ஆசிரியர் ஸ்ரீ நார்மன் கஸின்ஸ்அவர்கள் எழுதுவது வருமாறு: "கிழக்கு — மேற்குஎன்ற மேல்தோற்றவேறுபாடுகளை ஒருபுறம்வைத்துவிட்டு, உலகெங்குமுள்ள மாந்தர்யாவரும் ஒருவரைப்போலத்தான் அனைவரும் இருக்கிறர்கள்என்ற உண்மையை ஆசிய, அமெரிக்கமக்கள்அனைவரும் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். இன்றையதேவை என்ன? ஆசியாவிலும், அமெரிக்காவிலும் (தென், வட அமெரிக்காஇரண்டும்) ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ளகல்விமான்களும், தத்துவஅறிஞர்களும் மனிதனின் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் கருத்தைச்செலுத்தவேண்டும். மனிதவர்க்கம்முழுவதும் வருங்காலத்தில் என்ன நிலைமையை அடையப்போகிறது என்பதைப்பற்றித்தான் இப்போது பேசவேண்டுமேதவிர "என்தேசம், உன்தேசம்" என்று கிழக்கேயும் மேற்கேயும் திக்குத்திசை பார்த்துக்கொண்டு பூகோளவாரியாகப் பேசுவது இப்போதையதேவையல்ல. ஒன்றேஉலகம். அதில் நிறைந்துள்ள மனிதகுலம் ஒருவகைப்பட்டதே. இதுவேசிந்தனையாக இருக்கவேண்டும். நம்மிடையேயுள்ள வேற்றுமைகளைப் பற்றி நாம்படித்தபடிப்பு முடிந்துவிட்டபடியால், இனிமேல்.இந்தப் படிப்பு நம்மிடையேயுள்ள ஒற்றுமைகளைப்பற்றி அறிவிக்கட்டும். தோலின் நிறத்தையும், கண்ணின் அமைப்பையும், சிகையின்வர்ணத்தையும், அல்லது நமதுகலாச்சார, மத, தேசிய பின்னணிகளையும்சார்ந்த வேறுபாடுகளைக் குறித்து எழுகின்றசவாலைவிட இன்னும் அதிமுக்கியமான சவால் ஒன்று தற்போது விடுக்கப்பட்டுள்ளது. அதுவே, இந்தஉலகை மனிதனின் வாழ்விற்குத் தகுதியாக்கும்— பந்தோபஸ்தாக்கும்அவசியமாகும். "கிழக்கு" "மேற்கு"என்ற இரண்டு "உலகங்களில் நாம்வாழ்ந்துகொண்டிருக்கலாம் ஆனல், மனிதவாழ்வு இந்த ஒரு கிரகமாகிய பூமிக்குள்அடங்கியதுவே."

## கட்டுக்காவலைக்கடந்து விஜயம்

— பேர்லின்

கம்யூனிஸ்த பேர்லின் நகரிலே "உலகசமாதான விழா" வைக் காண வந்த ஆயிரக்கணக்கான வாலிபர்கள் இப்போது சுதந்திர பேர்லின்நகருக்கு விஜயம்செய்துகொண்டிருக்கிறர்கள். கம்யூனிஸ்த கட்டுக்காவலைக் கடந்து இப்படிவந்தவர்களில் இதுவரை 283 பேர் சுதந்திரபேர்லினுள் புகலிடம் நாடியுள்ளார்கள். ஒருலட்சம் வாலிபர்கள் கம்யூனிஸ்த பேர்லினிலிருந்து சென்றசெவ்வாயன்று இரவு சுதந்திரபேர்லினுக்குள் நுழைந்தனர் என்று மதிப்பிடப்படுகிறது. கிழக்குப்பேர்லினில் "விழா"வுக்கென வந்துள்ளவர்களுக்குக் கம்யூனிஸ்தர்கள் மூன்றுவிதமான போசன பங்கீடுகள் செய்துள்ளனராம். கிழக்குஜேர்மனியர்களுக்கு மூன்றுவதுவித (ஆகப் படுமோசமானது) உண்டி அளிக்கப்படுகிறது. மேற்குஜேர்மன் பிரதிநிதிகளுக்கும், நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கும் இரண்டாவதுவிதசாப்பாட்டு மரியாதை. ஜேர்மனியர் அல்லாத பிரதிநிதிகளுக்கும், உயர்தர அதிகாரிகளுக்கும் முதல் வகுப்புச்சாப்பாடு. இத்தகவல்களைத்தரும் கிழக்கு ஜேர்மன்யுவர்ஒருவர், "சாப்பாட்டுவிஷயத்தில் சோவியற்பகுதியிலுள்ள அதிகாரிகள் ஒருவரையொருவர் திருடுகிறர்கள். அநியாயஊழல்"என்று ஆத்திரத்தோடுகூறுகின்றர்.

## பழைய போர்வீரரின் கோரிக்கை

— நியூயோக்

அமெரிக்க பழைய போர்வீரர்கள் கம்மிற்றியின் உபஅக்கிராசனர் கர்ட்டிஸ் காம்பயின், ஜூனியர், தற்போது கம்யூனிஸ்த பேர்லின்நகரில் "உலகவாலிபர்விழா"வுக்காகக் கூடியிருக்கும் சோவியற்சார்புநாட்டு வாலிபர்களுக்குப் பின்வரும்கோரிக்கையை விடுத்துள்ளார்: "இரண்டாவதுமகாயுத்தத்தில் கொடுங்கோலையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்த்துச் சமர்புரிந்த இளம்அமெரிக்கவீரர்கள் உங்களுக்கு இந்தச்செய்தியை விடுக்கின்றனர். உங்களுக்குநாங்கள் ஏன்இந்தச் செய்தியை விடுக்கிறேம் எனில், நாங்கள் உங்கள்தோழர்கள், நீங்களும் எங்கள் தோழர்களாயிருக்க வேண்டும்என்பதனுல்தான். இப்போது கம்யூனிஸ்த பேர்லினில்நடக்கும் வாலிபர் விழா இருக்கிறதே; இது ஹிற்லர்நடத்திய விழாக்களைப்போன்றதுவே; ஹிற்லர் எந்தஉத்தேசத்துடன் விழாநடத்திஞரோ, அதேஉத்தேசத்துடன்தான் கம்யூனிஸ்தர்களும் இந்த விழாவை நடத்துகிறர்கள். மறுநாடுகளின் சுதந்திரத்தைக் கொள்ளைகொள்ள ஆக்கிரமிப்புப்போர் தொடுக்கும்படி வாலிபர்மனதைக் ஹிற்லர்தூண்டினர். அதையே கம்யூனிஸ்தர்கள் தற்சமயம் செய்கிறர்கள்.

சமாதானத்தில் அக்கறைகொண்டே நீங்கள் விழாக்கூட்டுவதாக உங்கள் தலைவர்கள் கூறுகிறர்கள். ஆனல், உங்களைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதைக் கவனியுங்கள். பகையைவளர்க்கும்படி சொல்வதும், பலாத்காரத்திற்குத்துணையாகப் பட்டாளங்களைப் படைக்கப் போதிப்பதும்தான சமாதானத்திற்கான வேலைகள்? அறிவிலிகளாகிவிடாதீர்கள். கம்யூனிஸ்தர்கள் சொல்லும் 'வரப்போகுப்புரட்சி'என்பது பிற்போக்கான மக்கள் உரிமைகளைப் பறிமுதல்செய்யும் ஆக்கிரமிப்பு இயக்கம்என்பது முன்னர் பன்முறையும் நிரூபிக்கப்பட்டுள்ளது."

## ஸ்ரீமதி இராசம்மா பிரான்ஞ்சீஸ்காவின் தேகவியோகம்

புங்குடுதீவிலே நெடுங்காலம் ஆங்கிலவைத்திய தொண்டாற்றிப் பலராலும் நன்கறியப்பெற்றவராயிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். வஸ்தியாம்பிள்ளையவர்களின்பாரியார் ஸ்ரீமதி இராசம்மா பிரான்ஞ்சீஸ்காஎன்பவ இருமாதகாலம் நோய்வாய்ப்பட்டிருந்து எவ்விதசிகிச்சையாலும் குணமுருது தனக்குண்டான கடினஉபத்திரவங்களையெல்லாம் தேவசித்தத்துக்குப் பணிந்தமனதுடன் பொறுமையாய் அனுபவித்து அந்தியதேவதிரவிய அனுமானங்களை நல்லறிவுடன்பெற்றுத் தேவனின் பத்தினிகளாய்த் தான் பெற்றுவளர்த்த மூன்று கன்னியர்களும் செய்துநின்ற செபங்கள், சங்கீதஓசைகள்மத்தியிலே, இனசனர் புடைசூழ்ந்துபிரலாபித்துநிற்க நிகழ்மதி 9-ந்திகதி காலைஎட்டுமணியளவிலே தனது 67-ம்பிராயத்தில் மரணநித்திரையாயினு. இவ கரம்பனிலே பெருஞ்சிறப்புடன் வாழ்ந்திருந்த ஓர் பிரபலகுடும்பத்தில், உத்தம கத்தோலிக்க பரம்பரையில் உதித்தவ. கம்பளையிலே றெயில்வேப்பகுதியில் O. I. C. ஆகக் கடமைபார்த்துவரும் திரு. B. இக்னேஷிஸ்அவர்கள் இவவின் ஏகபுதல்வா. காம்பன் கன்னியர்மடத்துக்கலாசாலைப் பிரதமஆசிரியை சங். சிஸ்றர் கொளெற் இவவின் சிரேஷ்ட புத்திரியும், கொழும்புத்துறை ஆசிரியகலாசாலைப் போதகாசிரியை சங். சிஸ்றர் பீற்றர் இரண்டாம் புத்திரியும், இளவாலைக் கன்னியர்மடத்துப் பிரதமஆசிரியை சங். சிஸ்றர் அசெம்ரா மூன்ருவது புதல்வியுமாவர். பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில் பூமிசாஸ்திரப் போசிரியராய்விளங்கும் திரு. J. S. B. செல்லத்துரை அவர்களின்பர்ரியார் இவவின்கனிஷ்ட புதல்வியாவர்.

இவ தேவநேசம், பிறர்நேசம், தர்மசிந்தையுடையவவாய், தாழ்மை, பொறுமைஆதியாம் சுகுணங்களில் சிறந்தவவாய், அன்பாதரவாலும், இன்சொல்லாலும் அயலாருக்கும், இனசனருக்கும் அருமையானவவாய், அடக்கம், தயை, தாட்சணியம் ஆதியவற்றில் ஏனையபெண்மணிகளுக்கு ஓர் மேல்வரிச்சட்டமாயிருந்து, தனது அன்பானமக்கட்குத்தேவநேசத்தைப் பாலியப்பிராயந்தொடக்கம் பாலுடன் ஊட்டிவந்தமையாலே யாழ்ப்பாணக் கன்னியர்மடத்தில் மூன்று நட்சத்திரங்கள்போல் திகழும் முக்கன்னியர்களை எம்மேற்றிராசனம்பெற்று விளங்குகின்றது. தனது அந்தியவேளைவந்ததும் "என் அருமைமக்களே! உங்கட்காக நான் பரகதியிலிருந்து திவ்விய யேசுவை நித்தமும் மன்ருடிவருவேன்"என்று உச்சரித்தகடைசிவாக்கியமே இவவின் பரிசுத்தசீவியத்தைப் பகிரங்கமாகக் காட்டுவதாயிற்று.

அன்றுசாயந்தரம் 5 மணியளவில் யாழ்ப்பாணம், இளவாலைக் கன்னியர் மடங்களைச்சேர்ந்த பிள்ளைகளும, 32 கன்னியாஸ்திரிமாரும் துக்கசந்தாபத்துடன் செபங்கள்ஓதி இருநிரையாக முன்னேசெல்ல, வண. வில்லியம்யேசுதாசன் சுவாமியவர்களைத் தலைமையாகக்கொண்டு பலகுருமார் துக்கசங்கீதங்கள் பாடிச்செல்ல, அழகிய பேழையிலே இவவின் உயிர்நீத்த உடலமானது வைக்கப்பெற்ற இரதத்தை இருவெண்பரிகள் பெருந்தெருவூடாக மெல்லென இழுத்துச்செல்ல, இனசனர்சிநேகிதர் புடைசூழ்ந்துசெல்லச் சேமக்காலைகொண்டு சென்று குரவர்கள் அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கப் பூமதானம் செய்யப்பட்டது. இவவின் பிரிவாற்ருது துன்புறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப்படுகின்றேம்.

R. I. P.

## சாவகச்சேரிப் புதினம்

நாடும் நிலையும்:— பகலவனின் கொடுமை தாங்கவாற்ருது இவ்வூர் மக்கள் தலையில்கைவைத்து வானம் வழங்காதோ, வையகம் வாழாதோ வென்று நெட்டுயிர்த்து வானத்தைப் பார்த்தவண்ணம் இருக்கின்றனர். மாடாடுகள் நோய்வாய்ப்பட்டு மடிகின்றன. கோழிகளுக்கும் நோய்தலை காட்டத் தொடங்கிவிட்டது.

புதிய சிலுவை :—சாவகச்சேரிப் பகுதிக் கத்தோலிக்கர் மிகவுஞ்சொற்பப்பேர். இவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்துவந்துகுடியேறியவர்கள். அதிகமானேர் மேசன்வேலை செய்கிறவர்கள். இவர்களுள் திரு. என்.இறப்பியேல் தனது தொழில்முயற்சியினுல் கிடைத்த இலாபத்தைக்கொண்டு அர்ச். விகோரியார்போல் ஒருசிலுவைமரத்தை நேர்த்தியின்படி நிறுவியிருக்கின்ருர்.

எங்கள்பாடசாலை:—எமது பாடசாலைஒன்று இருக்கிறதென்று எத்தனையோபேருக்குத் தெரியாது. சமீபத்தில்நடந்த சுகாதாரவிழாப் போட்டியில் பங்குபற்றிய பின்னரே எங்கள்பாடசாலையைப்பற்றி இப்போது பலருக்கும் தெரியவரலாயிற்று.

இலவச பால்நிலையம் :—இலவச பால்நிலையம்ஒன்றை ஏற்படுத்தும் நோக்கமாகத் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். பி. தேவேந்திர பிள்ளையுடன் எங்கள்தலைமைஆசிரியர் எஸ். பி. ஞானசோதி கடிதப்போக்குவரத்து நடத்திக்கொண்டுவருகிறர். ஆனல்காரியம் இலகுவில்முடியவேண்டுமானல் எங்கள்பிரதிநிதி திரு. வி. குமாரசாமிஅவர்களின் உதவி எங்களுக்குக் கிடைத்தால் நன்றுகும்.

அர்ச். விகோரியார் திருநாள் :— இவ்வருடம் அர்ச். விகோரியார்திருநாள் எவ்வருடங்களிலும் அதிகஞ் சிறப்பெய்தலாயிற்று. எமது பட்டின சங்கத்தார் மின்சாரவசதியும் அளித்திருந்தால் இன்னும்அதிகஞ் சிறப்புற்றிருக்கும். சென்ற 25-ந்திகதிதொடக்கம் கோயிலானது உள்ளும்புறமும் பலவிதமாலைகளாலும் நவமானதீபங்களாலும் சிறப்புற்றிலங்க, பாவோசை செபவோசை முதலியவற்றினிடையே இருகுருமார்துணைபுரிய வேஸ்பர் பாடிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பெற்றுச் சுரூபஎழுந்தேற்றமும் நடைபெறலாயிற்று. திருநாளுக்கு முதனுள் புதவாரம் பலவிடங்களிலுமிருந்துவந்து குழுமிய பக்தர்களால் கோயில்வளவுதேங்க, ஒலிபெருக்கியின்உதவியோடு செபமாலைஓதியபின் இருகுருமார் துணைபுரிய வண. கட்டளைக்குரவரால் வேஸ்பர்பாடித் திருச்சுரூப எழுந்தேற்றஞ் செய்யப்பட்டது. திருநாளன்று வியாழக்கிழமை காலை பக்தர்குழாம் தேங்கிநிற்க, பாலர்பண்ணிசைக்க, வண. கட்டளைக்குரவரால் பாடற்பூசை நிறைவேறியது. பூசையின்பின் திருச்சுரூபம் ஓர்கேடயத்தில்வைத்து நான்குபாலர்கள் கரத்தேந்திச்செல்ல, பக்தர்குழாம் அணி அணியே செபங்களோதி முன்செல்ல, சுற்றுப்பிரகாரம் நடைபெறலாயிற்று. அதன்பின்னர் எல்லாருக்கும் பாற்கஞ்சிபரிமாறப்பட்டுத் திருநாள் முடிவுற்றது.

— நிருபர்

**CEYLON GOVERNMENT RAILWAY**

**Level Crossing Repairs**

The Level Crossing at 8 miles 75.35 chains (Railway mileage) Ragama South on the Welisara-Kadawatte Road between Hunupitiya and Ragama Railway Stations will be under repairs and closed for vehicular traffic from 12.0 Mid-night on Friday, 24-8-51 to 3.0 a.m. on Saturday, 25-8-51.

During the period of closure traffic from Kandana to Ragama can proceed *via* Bolatte and traffic from Colombo to Ragama on the Kandy road turning left at Kadawatte.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவாலியர் சேர் காடினர் தம்பதிகளும்

## அச்சுவேலிக் கிராமச்சங்கமும்

மாட்சிமைவாய்ந்த மன்னர்பெருமானாலே மகிமைவாய்ந்த நைற்பட்டமாகிய சேர்ப்பட்டம்வழங்கிச் சன்மானிக்கப் பெற்றவரான செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் அவர்களைக் கௌரவிக்குமுகமாகச் சென்ற 12-ந்திகதி ஞாயிறன்று அவரின்தாயகமான அச்சுவேலிக் கிராமச்சங்கம் அவருக்கும், அவர் பாரியாருக்கும் அளித்துநின்ற பெருமிதமான வரவேற்பின் பெருமையோ வருணிக்குந்தரமன்று. அன்றுபிற்பகல் 5 மணியளவிலே கிராமச்சங்க தலைவரும, அங்கத்தவர்களும், பிரமுகர்கள்பலரும், மற்றுந்திரளான பேர்களும் பத்தமேனி, இரத்தினேஸ்வரி பாடசாலைச்சந்தியிலே பெருந்தொகையாகக் குழுமியிருந்து காடினர் தம்பதிகளை வரவேற்றும் புஷ்பாரங்கள்சூட்டி, வாத்தியவரிசைகளுடன் பெரிதும் ஆடம்பரமாகச் சென் தெரேசா கலாசாலைமண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். வழிநீளம் அபிமானிகள்பலரும் மாலைக்குமேல் மாலைகள்அணிந்தும், மலர்ச் செண்டுகள்அளித்தும் அவர்களைக் கனப்படுத்தி நின்றார்கள்.

ஊர்வலமானது, பலவர்ண மின்சாரதீபங்களாலும், ஒலிபரப்பியின் இனிய கானங்களாலும், பகல்போற்சிறந்து மகாராஜாவின் மணிமாடம்போன்று காட்சியளித்துக் கொண்டிருந்த சென் தெரேசாகலாசாலை மண்டபத்தை அடைந்ததும் அங்கண் உயர்மேடையின்கண், குருவர்கள் மற்றும் பிரபலஸ்தர்களிடையே நடுநாயகங்களாக விழாநாயகர்கள் இருவரும் வீற்றிருக்க, கிராமச்சங்கதலைவர் ஸ்ரீ எஸ். வீரசிங்கம் அவர்கள்தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. காடினர் தம்பதிகளைவரவேற்று அவர்நிகழ்த்திய தலைமையுரையிலே, "பெற்றதாயும், பிறந்த பொன்னாடும், நற்றவவானிலும் நனிசிறந்தனவே" என்னும் மணிமொழியை எடுத்தாண்டு, எந்நாடு சென்றபோதிலும், என்னபெரும் குபேரசம்பத்துடையராய் இருந்தபோதிலும் சேர் காடினர் அவர்கள் தமது சென்மபதியை மறக்கவில்லை; அதன் முன்னேற்றங்கருதித் தம்மாலானதைச்செய்யப் பின்வாங்கவில்லை என்று அவரைப்பாராட்டி, அவர் செய்துள்ளவைகளை எடுத்துக்காட்டி அவரை வாழ்த்திநின்றார். அதன்மேல் பத்தமேனி விதானையார் ஆர். சோமசுந்தரம் அவர்கள் முன்சென்று அழகாகப்படித்துக்கொடுத்த வந்தனோபசாரப்பத்திரம் வருமாறு:

### வெண்பா

சீரான கார்டினரே! சிற்றம் பலத்துரையே!
போரான சேர்ப்பட்டம் பெற்றவரே!—ஆராத
அச்சுநகர் மக்களது ஆணிமுத்தே! வாழுக! நீர்
இச்செகத்திற் பல்லாண் டினிது.

### நேரிசை ஆசிரியப்பா

ஆண்டவ னருளினை வேண்டியே யிந்நாள்
ஈண்டெழுந் தருளிய எம்பெருந் தலைவ!
கருதுநின் வரவைக் காணுறும் யாங்கள்
பரிதியை நோக்கும் பங்கய மானோம்.
வருக! வருக! துரையே! வருக!
உச்சிமேற் புகழும் அச்சுமா நகரின்
வச்சிரத் தூணே! வருக! வருக!
மங்கையோ டினிது மாண்புற வருக!
பிறந்தபொன் னாட்டை மறந்திடாப் பெரியோய்!
சிறந்திடு குணங்கள் நிறைந்திடு குன்றே!
மறந்துங் கேடு மனத்தினி லெண்ணு(து)
அறந்தனைப் புரக்கும் அரணே! அந்தப்
பாரியும் மாரியும் பழித்திட ஈயும்
சீரிய வள்ளற் றிறனினைப் பாட
அல்லும் பகலும் அவாவுற் றாலுஞ்
சொல்லும் பொருளுந் தோன்றிட நாணும்!
பெற்றோர் செய்த பெருந்தவப் பேறும்
நற்றவ அச்சு நகர்தனின் பேறும்
சொற்கலைப் புலவரும், அற்புதன் தொழும்பு
முற்படச் செய்த முனிவராஞ் சுவாமி
ஞானப்ர காசர் நற்றவப் பேறும்
சேர்ந்துரு வெடுத்த சீரியோய்! ஞானத்
தேனார் கன்னியர் தெரேசா மடமும்
வானார் அமலி வனமும் வைத்ய
சாலையும் பிறவுஞ் சாட்சி பகருங்
கோலமே காணின் குபேரனும் அஞ்சும்!
சேர்ப்பட்டம் பெற்ற சிறப்பினைச் சொல்கோ!
செவாலியர் பட்டத்தின் சீர்த்தியைச் சொல்கோ!
காணுமெப் பட்டமும் கைமேற் கொண்டு
பூணும் மணியே! பொன்னே! யென்கோ!
"யாது மூரே யாவருங் கேளி" ரென்
றோது மொழியை உச்சியிற் கொண்டு
திருமணஞ் செய்த சீரியோய்! நீதான்
மருவு மில்லற மாண்பினுக் கேற்ற
நாலெட் டறமும் நன்கே யாற்றி
இறைவ னருளால் என்றும்
குறைவிலா வாயுள் நிறைகபல் லாண்டே!

### விருத்தம்

தங்கமுறு மச்சுநகர்க் கிராமச் சங்கம்
தண்மதிபோற் சுடர்பரப்புந் தகமை வாழி!
பங்கமுறு செயலெலாம் நீங்க ஞானப்
பாலாறு பாய்ந்துவரும் பண்பு வாழி!
திங்கமுறு கார்டினரும் வாழ்வுக் கேற்ற
துணையான லற்றிசியாச் சுகுணத் தோடே
எங்குமுறு மக்களெலா மினிது வாழி!
இறைவனருள் மழைபெருக! வாழி! வாழி!

பின்னர் வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள் பேசியபோது, சேர் காடினர்அவர்கள் தமது ஆசிரியரென்றும், இப்போது அவருடைய குருவாகத் தாம் இருக்கிறாரென்றும், அச்சுவேலிக்காகத் தாம்என்னஉதவிகேட்டபோதும் அவர் இல்லையென்னாது உதவிவந்தாரென்றும், அவர்செய்த உதவிகளுக்குத் தாம் அப்போதுநிற்கும் அந்தமேடையே சான்றுபகருமென்றும் சிறப்பாகக் கூறியருளினார். சுவாமியவர்களைத் தொடர்ந்து அச்சுவேலி விதானையார் எஸ். குமாரவேலு அவர்களும், கிராமச்சங்க மாஜிதலைவர் ரி. தம்பிமுத்து அவர்களும், ஆசிரியர் ஏ. ஆர். மனுவேற்பிள்ளை அவர்களும், காரியாதிகாரி செல்வரட்ணம்அவர்களும், திரு. பி. எஸ். யோசெவ் அவர்களும் சேர் காடினர்அவர்களின் வரையாத வள்ளற்தன்மையையும், அச்சுவேலிக் கிராமத்துக்குச் சமயபேதமேபாராது அவர் ஆற்றியுள்ள அளப்பரும் சேவைகளையும்வியந்து அவருக்குப் புகழ்மாலைசூட்டி, இன்னும் அக்கிராமத்தின் சிலதேவைகளை எடுத்துக் கூறினார்கள்.

ஈற்றில், சேர் காடினர்அவர்கள் எழுந்து அளித்தபதிலிலே, தம்மையும், தமது பாரியாரையும் ஆடம்பரமாக வரவேற்றுக் கௌரவப்படுத்தியதற்காக நன்றித்துதிசாற்றி, அவர்களுக்குள்ள தேவைகளைப் பூர்த்திசெய்வதில் தாம் என்றைக்கும் ஆர்வம்கொண்டிருப்பதாகவும், தாம் செனற்றராகவிருக்கும் ஓர் ஆண்டினுள் அவர்களுக்குப் பிரசவவிடுதிச்சாலை ஒன்றை அமைப்பித்துத் தருவதாகவும் தெரிவித்துக்கொண்டார். அதன்மேல் சபைபரிமளிக்கும்படியாக [illegible] சிறுமியர்நாட்டியத்துடன் விழாசிறப்பாகப் பூர்த்தியாயிற்று.

—விசேஷ நிருபர்

## வாக்களிப்புச் சுதந்திரம்

### சரிவரப் பயன்படுத்துக

சுகாதார—தலதாபன மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. வி. நல்லையாஅவர்கள் சென்ற 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றிலே ஓர் கிளைமருந்துச்சாலையைத் திறந்துவைத்துப்பேசியபோது: "இன்று இலங்கையில் 'கட்சி' என்றபதத்திற்குரிய சரியானஅர்த்தத்தில் மூன்றே மூன்று கட்சிகள்தான் உள்ளன. ஐக்கியதேசியக்கட்சி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்தகட்சி ஆகியனவே அம்மூன்று கட்சிகளுமாகும். ஏனையகட்சிகள் அனைத்தும் காளான்கள்போன்று இரவோடுஇரவாகத் தோன்றியனவும், இந்நாட்டிலுள்ள பல்வேறுவகுப்பு மக்களிடையே மனஸ்தாபத்தை உண்டு பண்ணும்நோக்குடன் வகுப்புவாத அடிப்படையில் அமைக்கப்பட்டனவுமாகும்" எனக்கூறலாயினர்.

அவர் தமது பேச்சில் சமஷ்டிவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டித்துக் குறிப்பிட்டதாவது: 'அவர்கள் தம்மை ஆங்கிலத்தில் "சமஷ்டிவாதிகள்" என்று பொருள்படும் பெயராலும், தமிழில் ஒரு வகுப்புவாதக்கட்சி என்பதை எடுத்துக்காட்டும் 'தமிழரசுக் கட்சி' என்ற பெயராலும் வழங்கிவருகின்றனர். அவர்களை இங்கே வரவேற்கவோ, அமைதியைவிரும்பும் அக்கரைப்பற்று மக்களிடையே சச்சரவை ஏற்படுத்த இடமளிக்கவோ கூடாதென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.'

அத்தருணத்தில் கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டகேள்விக்குப்பதிலளிக்குமுகமாகத் திரு. நல்லையா அவர்கள் மேலும்கூறியதாவது:

"இந்நாட்டில் ஒரு ஜனநாயகக்கட்சியாக விளங்கும் ஐக்கியதேசியக்கட்சியானது வாக்குச்சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சமயவழிபாட்டுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றை மக்களுக்கு வழங்கியுள்ளது. கம்யூனிஸ்தகட்சியும் இவற்றை மக்களுக்கு அளிப்பதாக வாக்களித்துள்ளது. ஆனால், அக்கட்சி அதிகாரத்திற்குவரின் இலங்கைமக்கள் தமது மூலாதாரஉரிமைகள் அனைத்தையும் இழந்துவிடுவரென்பதற்கு உலகில் அக்கட்சி அதிகாரத்திற்குவந்துள்ள இடங்களில் தற்போது நடைபெற்று வருவனவே அத்தாட்சிகளாகும். ஆகவே, சுதந்திரஇலங்கைப் பிரசைகளாகிய நாம் நமது பெருந்தனமாகிய வாக்களிப்புச் சுதந்திரத்தை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தவேண்டும். வாக்களிப்புச் சுதந்திரத்தைத் தவறான வழியில்பயன்படுத்திக் கம்யூனிஸ்தர்கள் ஆதிக்கத்திற்குவர உதவினோமானால், அவர்கள்வந்ததும் கவனிக்கும் முதல் வேலை நம்மிடமிருந்து வாக்களிப்புச் சுதந்தரத்தைப் பறித்துவிடுவதுதான். அவர்கள் இங்குவந்து தமது சாதுரியப் பேச்சுகள்மூலமாக ஐக்கியதேசியக் கட்சி நாட்டுக்கு என்னென்ன செய்யவில்லை என்றும், என்னென்ன தவறுகள் செய்துள்ளதென்றும் எடுத்துக் காட்டி உங்களைமயக்க முயலக்கூடும். ஆனால், அவர்களது தவறானவழியில் இழுபட்டுவிடவேண்டாமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். உலகில் எந்தஅரசாங்கமாவதுமக்களின் பரிபூரண திருப்திக்கு உள்ளானதில்லை. ஆனால், ஐக்கியதேசியகட்சி எத்தகைய சாதி, சமயபேதமுமின்றி மிகவும் பிரயாசையுடன் மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றிவருகிறது. இந்தநான்கு வருட காலத்திற்குள்ளாக ஐக்கிய தேசியக்கட்சிஅரசாங்கம் மக்களுக்காகச் செய்துள்ளவற்றை வேறெந்த அரசாங்கமாவதுசெய்வது சாத்தியமில்லை. இந்தமாகாணமக்கள் அரசாங்கத்துக்கு நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும்."

## லூர்துபதியில் மற்றோர்புதுமை

பிரான்சிலே மார்சேல்ஸ் நகருக்குச் சமீபமான மசார்தாளனுமிடத்திலே யுத்தகாலத்தில் ஏற்பட்ட துன்பங்காரணமாகத் தனது கால்களிலும், கைகளிலும், முகத்திலும் பாரிசவாதங்கண்டு அநேக வருடகாலம்வருந்திய இராக்கேல் பாண்கன் எனும்மாது சமீபத்திலே லூர்துகெபி அற்புதசலத்தில் குளிப்பாட்டப்பட்டதும் உடனே தானே யாவருங்காணப் பிரத்தியட்சமாகப் பூரணசுகமடையலாயினள். இந்தப்புதுமையையும், மற்றும் வெளிப்படையான அற்புத ஆரோக்கியங்களையும் பற்றியசெய்திகள் லிவர்ப்பூல் மேற்றிராசனத்திலிருந்து அதன் துணைமேற்றிராணியாரான ஹல்சால் ஆண்டவரின் தலைமையில் அப்பதியிற் சமுகமாயிருந்த ஆயிரம் யாத்திரிகர்கள் மத்தியிலும் காட்டுத்தீபோன்று பரவலாயின. அதே சந்தர்ப்பத்தில் செபத்தாலும், கிறீஸ்துநாதரது போதனையை உண்மையாக்குவதாலும் உண்மையானசமாதானம் உண்டாகுமென்பதைப் பரப்புவதையே தனது குறிக்கோளாகக்கொண்ட சர்வதேசஇயக்கமாகிய கிறீஸ்துவின் சமாதான யாத்திரையும் அங்கு நடைபெறலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிரான்சீஸ்துவின் மூன்றாஞ் சபை

இச்சபையின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 31-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். அவ்வமயம் இருசகோதரர்கள் தம் நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். மூவர் நிலையந்தஸ்தில் சேர்க்கப்படுவார்கள். புரட்டாசி மாதம் பின்வரும்தேதிகளில் சகோதரர்கள் பரிபூரணபலன்களை அடையலாம்:— 1, 4, 8, 14, 17, 18, 24, 27, 29. அதேமாதம் 8-ம் 17-ம் தேதிகளில் பொதுப் பாவமன்னிப்பு உண்டு.

A. S. FRANCIS OF MARY
for Director

## என் வாழ்வின் ஒளி கிறீஸ்துநாதர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர்கூறிய ஒவ்வொருசொல்லும் அகவிருளை விரட்டும் ஒளிக்கதிர். சுவிசேஷங்களை நீங்கள் அடிக்கடி வாசிக்கிறீர்களா? சுவிசேஷவாக்குகளை உங்கள் வாழ்வில் திட்டமாக்கிக்கொண்டீர்களா? தயக்கம்ஏன்? தடை ஒன்றும்கிடையாதே. கிறீஸ்துநாதர் நம்குரு. அவரது கழலடியில் அமர்ந்து கற்றுக்கொள்வோம்.

சுவிசேஷத்தில்பொதிந்துள்ள ஞானஒளியை நமக்குத் தெளிவுறுத்துவது கிறீஸ்துநாதர்நியமித்த போதகபீடமாகிய சத்திய திருச்சபையின் புனிதவேலை. சூரியப்பிரகாசத்தை ஏறெடுத்துப்பார்க்கக் கண்கள்கூசுகின்றன. ஆனால், அதேஒளியைச் சந்திரனிடங்கண்டு கண்கள் குளுமையடைகின்றன. அதேபோல் கிறீஸ்துவின் அளவிலா ஞானத்தை ஒரேபார்வையில் நாம்அறியமுடியாது. திருச்சபையின்வழூவாப் போதகவாயிலாய் அந்தஞானத்தைப் பெறுகிறோம்.

தம்மறையுடலாம் திருச்சபையின்வழியே கிறீஸ்துநாதர் இன்றுஒளிர்வதால், நீ சத்திய திருச்சபையின் உத்தமபிள்ளையானால், கிறீஸ்துநாதர் உன் வாழ்வின் ஒளியாகத்திகழ்வதை உணருவாய்.

(இ. தா.)

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்ததேவதாயார், அர்ச். சூசையப்பர், அர்ச். அன்னம்மாள், அர்ச். பிலோமினம்மாள், அர்ச். தெரேசம்மாள், சங். அல்போன்சாகன்னியாஸ்திரி, அர்ச். அந்தோனியார், அர்ச். பேதுருவார், சம்பாவுலுவார் இவர்களின் மன்றாட்டினால் சென்ற 1949-ம்ஆண்டு ஆடிமாதம் 30-ந் திகதி நடந்த கார்விபத்தில் எனது வலதுகரம் முரிந்து, செய்யாதவயித்தியமெல்லாம்செய்தும் குணப்படவில்லை. கடைசியாக மேற்படி அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும், முள்ளிவாய்க்காலில் வசிக்கும் வீ. மையப்புசாமி என்னும் சிங்களவைத்தியரின் சிகிச்சையாலும் சுகமானது. இன்னும் நல்லசுகமும் எங்கள் வறுமையும்தீர இச்சுத்தவாளர் இருதயநாதரிடம் மன்றாடி இரக்கம்புரிவார்கள் என்று நம்பி நேர்த்திப்படி பிரசுரிக்கின்றேன். பிரசுரதாமதத்துக்கு மன்னிக்கவும்.

முல்லைத்தீவு — ம. சவிரிமுத்து

Mal. No. 501 Engels

## ஆகாயத்திலிருந்து ஆபத்து

தற்போது இருந்துவருகின்ற மாதிரிகளைத்திருத்துவதற்கும், புதுமாதிரியான ஆகாயவிமானங்களை நிர்மாணஞ் செய்வதற்குமாக உலகமுழுவதுமே முயற்சிகள் நடைபெறுகின்றன. வருடக்கணக்கிலே நிபுணர்கள் இந்தப் பிரச்சினைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதிகமான அபிவிர்த்தி உள்ளபடியே ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் 20-ம்நூற்றாண்டின் ஆரம்பத்திலே முதல்ஆகாயவிமானங்களைக் கட்டும் வேலைகள் அச்சத்தோடும், நடுக்கத்தோடும் கொண்டுநடத்தப்பட்டன. இந்நாட்களிலே ஜெற்கொண்டு இயக்கப்படும் யந்திரங்களைப்பற்றிப் பேசும்போது எவருமே பறுவாய்பண்ணுவதில்லை. யுத்தநடவடிக்கையால் மேற்கொள்ளப்பட்ட அநேக சனங்கள் திருத்தம்அடைந்துள்ள இந்தவிமானங்களிலே வெளிப்படையான ஆபத்தைக் கண்டுகொள்ளுகிறார்கள். ஆனால், ஆகாயத்தைப் பாதுகாப்பற்றதாக்கக்கூடியது ஆகாயவிமானம் மாத்திரமல்லஎன்பதை அவர்கள் மறந்துபோகிறார்கள். கிருமிகளும் முடிவிலே அதிமிக அபாயத்துக்குரியனவாகி மனிதவர்க்கத்துக்குப் பயங்கரத்துக்குரிய மாபெரும்நஷ்டங்களை உண்டுபண்ணக்கூடியனவாகும்.

இந்தக்கிருமிகளின்தொகை அத்துணைமகாப்பெரிதாய் இருப்பதாலே உலகமானது கிருமிகளாலே ஆட்சிகொள்ளப்படுங்காலம் வருமோஎன்ற கேள்வி கடுமையாகச்சிந்திக்கப்படலாயிற்று. ஆயினும் அந்தக்காலம் இன்னும்வரவில்லை. சுகபங்கமான கிருமிகளைஎதிர்த்து நடைபெறும்யுத்தம் நாளுக்குநாள் மும்முரமாகிக்கொண்டு வருகிறது. ஏனெனில், அவைகள் கமத்தொழிலுக்கு மாத்திரமல்ல, ஆனால் முழுமையாக மனிதவர்க்கத்துக்குமே பேரபாயத்தை உண்டுபண்ணுவதாக நிருபிக்கப்பட்டிருக்கின்றது. இதுசம்பந்தமாய் மலேரியாவைக் கொண்டுசென்று பரப்புகின்ற நுளம்பாகிய அனோப்பிலெஸ் என்பதையே முதல் உதாரணமாகவைத்துச் சிந்திக்கிறோம்.

இரண்டாவது உலகயுத்தத்துக்கு முந்திய வருடங்களிலே டக்றர் அண்ட்று பல்போர்அவர்கள் எடுத்த கணக்கிலே வருடந்தோறும் மலேரியாவால்உண்டாகும் மரணங்களின் தொகை இருபதுலட்சம்வரையிலெனக் கணித்திருக்கின்றார். இன்னும் மனிதர்சஞ்சரிக்கும் உலகமுழுவதுமே அதுபரந்திருப்பதால் 65 கோடிக்குக் குறையாதமக்கள் மலேரியாவால் வருந்துகிறார்களென்றும் அவர் மதிப்பிட்டிருக்கின்றார்.

இந்தப்புள்ளிவிபரங்கள் சிலவருடங்களுக்கு முந்தியனவாகும். ஆயின் இதற்கிடையில் அநேகமாய்ச சற்றே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் மலேரியாவுக்குப் பலியாகிறவர்கள் தொகை இன்னுமே மிகஉயர்ந்ததாய் இருந்துவருகிறதென்பது முற்றுமே நிச்சயமாகும். ஆகவே, தற்போது இல்லாதொழிந்த சர்வதேச சங்கத்தினால் நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியாலே 1938-ம் ஆண்டுவிடுக்கப்பெற்ற ஓர்அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டதுபோன்ற சிகிச்சைமுறையானது அத்துணை பெரும் முக்கியத்துவமுள்ளதாய் இருக்கின்றது.

மலேரியாக்காலமுழுவதும் அது வராமல் ஓர்பாதுகாப்பாகத் தினமும் 6 கிறேய்ன் குயினைன் அருந்திவர வேண்டுமெனக் கம்மிஷன் விதித்திருக்கிறது. இன்னும் [illegible] மலேரியா காணுமிட[illegible] 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்துவர வேண்டுமெனப் புத்திகற்பித்திருக்கிறது.

இன்றைக்குமே மலேரியாஉண்டாகும் நாடுகளிலெல்லாம் இச்சிபாரிசுகளை மேற்கொண்டு நடப்பதாலே சிறந்தபலன்கள் பெறப்பட்டிருக்கின்றன.


... நிம்மதியான நித்திரை






என்ன ஆச்சரியம் ... இப்பொழுதெல்லாம் இராக்காலங்களில் நாங்கள் எழுந்திருப்பதே இல்லை. காரணம் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுப்பதுதான். தாய்ப்பாலில் உள்ள சத்துக்கள் பூராவும் லெக்டோஜனிலும் கிடைப்பதால் குழந்தை திருப்தியடைகிறது. மேலும் லெக்டோஜன் எளிதில் சீரணமாவதால், சீரணஉறுப்புக்கள் ஓய்வுபெற்றுக் குழந்தைக்கு நல்ல நித்திரையைக் கொடுக்கின்றன. ஆம், எல்லா இடங்களிலுமுள்ள தாய்மார்கள் இதை ஒத்துக்கொள்ளுகின்றனர் ... ஆகவே உங்கள் குழந்தைக்கு லெக்டோஜன் உணவு கொடுங்கள்.

லெக்டோஜன்

குழந்தைகளுக்கேற்ற சிறந்த உணவு.


## உதிர்ந்த முத்து

தனக்கு நல்ல ஓர்கணவன் கிடைக்கும்படியாக ஒருபெண் பத்துவருடமாக நாள்தோறும் அர்ச். சூசையப்பரைப்பார்த்துப் பிரார்த்தித்துவந்தாள். பத்தாண்டுகள்சென்றும் அவள் மன்றாட்டுக் கிடைக்கும என்பதற்கு ஒரு அறிகுறியையும் காணவில்லை. கடைசியாக அர்ச். சூசையப்பர்மீதுள்ள நம்பிக்கையையும் அவள் இழக்கத்தொடங்கினாள். ஒரு ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப் போய்விட்டுவந்து அர்ச். சூசையப்பரின் சுரூபத்துக்கு முன்பாக முழந்தாளிட்டுத் தன்விண்ணப்பத்துக்குச் செவிசாய்க்கும்படி இன்னுமோர் முறை அவரை மன்றாடினாள். பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அவளது உள்ளத்தில் கோபமும், அவநம்பிக்கையும் உண்டாக,மேசையிலிருந்த அந்தச்சுரூபத்தைஎடுத்துத் திறந்திருந்த சன்னல் வழியாகத் தெருவில் வீசிஎறிந்தாள். அப்போது தெருவிலே நடந்துசென்ற ஒரு வாலிபன்மீது அது விழுந்தது, தலை காயப்பட்டது. உடனே அவன் வீட்டுக்கதவைத் தட்டினான். காயத்துக்கு ஏதாவது மருந்துகட்டிச் சுரூபம்விழுந்த காரணத்தையும் வினவலாம் என நினைத்தான். சுரூபத்தை வீசிய பெண் மன்னிப்புக் கேட்டாள். கட்ட மருந்தும் கொடுத்தாள். இவர்கள் இருவரும் அன்றுதொட்டு நண்பர்களாயினர். ஆறுமாதங்களுக்குப் பிறகு கலியாணஞ் செய்துகொண்டார்கள்.

## மரணசங்கதி

எழுவைதீவு, அர்ச். தொம்மை அப்போஸ்தலர்கோயில் சக்கிறிஸ்தாமாய், பலராலும்நன்கறியப்பெற்றவராயிருந்து காலஞ்சென்ற திரு. பி.பேதுருப்பிள்ளை செல்லையா அவர்களின் கனிஷ்டபுதல்வியும், திரு. நீ. இராயப்பு அவர்களின் வாழ்க்கைத்துணைவியுமான திருமதி. இ. எலிசபேத்தம்மா அன்னப்பிள்ளை என்பவ சிலகாலமாய் நோய்வாய்ப்பட்டிருந்து எவ்விதசிகிச்சையாலும் குணமுறாது அந்திய தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சென்ற 6-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் தனதுஆன்மாவைப் படைத்தோன்கரத்தில் ஒப்படைக்கலாயினாள். மரிக்கும்போது இவ்வுக்குவயது 45. இவ்வின் பிரேதமானது மறுநாள்பிற்பகல் அழகியபேழையில் வைக்கப்பெற்று எண்மர் காத்தேந்திச்செல்ல, குருவர் துக்கசங்கீதம்பாடிச்செல்லச் சேமக்காலை சேரலாயிற்று. அங்கு இனசனர் பிரலாபத்தினிடையே கட்டளைக்குருவர் கடைசிஆசீர்வாதங்கூறி நிற்கப் புதியகல்லறையில் பூமதானஞ் செய்யப்பட்டது. இவ்வையிழந்து துயருறும் மக்கள்மூவருடனும், நாயகர், சகோதரர், இனசனருடனும் யானும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P.

— நிருபர்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 23 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org